கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

காமக்கூடெனவழங்கும்

# காமநகர்ப்புராணம்.

(கத்தியரூபம்.)

ஆரணிஜாகிர் காமக்கூர் மங்களக்கவிராயர்
கந்தபிள்ளையவர்கள் எழுதிவைத்திருந்த
ஏட்டுப்பிரதி

ஷை காமக்கூர் தமிழ்ப்பண்டிதர்
மு. சுந்தரமுதலியாரால் பரிசோதிக்கப்பட்டு
மேற்படியூர் திருக்கூட்டக்காரியதரிசியான
க. சுந்தரப் பிள்ளை,
பு. அப்பு முதலியார், பா. சுபானுகிரி
இவர்கள் முயற்சியினால்

வேலூர்:
சுந்தரவிநாயகர் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

சௌமிய௵ கார்த்திகை௴.
சாலி—1831.



இளம்பிறையீஸ்வரர்.

## சிறப்புப்பாயிரம்.

### திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்மடாலயம் ஸ்ரீமத்-சுவாமிகளவர்கள் ஆசீர்வதித்த செய்யுள்.

காமநகர்ப்புராணமதை வசனமதாவச்சிட்டுக்
கவினத்தந்தோன்
ஏமநகரிமையவர்க்கா நஞ்சுண்டவெந்தைசர
ணிறுகப்பூண்டோன்
நாமகடனல்லருளு நற்றவர்தஞ்சீரருளு
நலக்கக்கொண்டோன்
ஆமநகர்புகழ்ந்திடுசுந் தரவேள்சீர்நலங்கள்பல
வமைந்துவாழ்க.

### ம-ள-ள-ஸ்ரீ, காஞ்சீபுரம் புராணிகர் சோணாசல பாரதியவர்களியற்றிய அறுசீரடி விருத்தம்.

காவிளம்பிறையத்தன் றுதிசெல்வக்காமநகர்க்
களிப்பின்வைகும்
மாவிளம்பிறையீசன் புராண மங்களக்கவிஞன்
வசனமாக
நாவிளம்பிறைகொட்டத்தழகாஞ்செந்தாமரைபோ
னயந்துவாழ்த்திப்
பாவிளம்பிறையெங்கள்சுந்தரவேளச்சிட்டுப்
பகர்ந்தான்வாழி.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமதி-பண்டிதை
அசலாம்பிகையம்மாளவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடிவிருத்தம்.

சிவமணக்குங்காமநகர்ச் சிறப்பதனைமுன்னாளிற்
செழுநீர்க்கங்கை
தவமணக்கவிந்நிலத்திற் றந்தபகீரதனேபோற்
றூழாவுக்க
நவமணக்கவின்றமிழ்நாவலசுந்தரப்புலவ
னடியாய்ந்து
பவமணக்குமிருவினையின் பூட்டறுத்துப்பயன்பெரிது
பயந்தானம்மா. [ம்

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்மடாலயம்
ஸ்ரீமத்-சுவாமிகளவர்களின் மாணாக்கர்
தி. அ. துப்புசாமி பத்தராலியற்றிய
அறுசீரடி விருத்தம்.

பொன்னிருக்குங்காமநகர்ப்பொலிவிருக்கும்பொருளி
புராணந்தன்னுட் [ருக்கும்
டென்னிருக்குந்தெய்வீகத் திருவருளானடந்தவெலாந்
தெளிவினாய்ந்து
முன்னிருக்குமுறைப்படியே சத்தியரூபத்துடனே
முயன்றெஞ்ஞான்றும்
பின்னிருக்கசி றுவினனாற் சுந்தரநாமப்புலவப்
பெருமையோனே.

# முகவுரை.

இக்காமநகர்ப்புராணம் குளத்தூரிலிருக்கிறது, முள்ளன்றத்திலிருக்கிறது, படைவேட்டிலிருக்கிறது என்று சில பிராமணர்களாலும், மற்றைப்பெரியோர்களாலும் சொல்லக் கேட்டதன்றி நேரில் கண்டதேயில்லை. ஆனால் இதிலுள்ள அத்திமலர்ந்த சரித்திரம், சோழச்சரித்திரங்களை மாத்திரம் ஒண்ணுபுரம் கணக்கு காமக்கூர் தெ. சுப்புராயப் பிள்ளை முதலியோரால் கர்ணபரம்பரையாகக்கேட்டதுண்டு. இந்நூலை வெளியிடவேண்டுமென்னும் பேராவாக்கொண்டு நானும் க. சுந்தரப்பிள்ளை, அப்பு முதலியார், சுபானுகிரி இவர்களும் பலவித முயற்சியெடுத்துக்கொண்டு தேடியும் நூல் கிடைக்காமையால் மனம் வெறுத்துவிட்டனம். நிற்க, சுமார் இரண்டு வருடத்திற்குமுன்பு திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் ஸ்ரீமத்சிவஷண்முகமெய்ஞ்ஞானதேசிக சுவாமிகளவர்களிடம் திருவண்ணாமலையில் மறைசையந்தாதிபாடம் கேட்குங்கால் ஏதோஒருகாரணமாகச்சுவாமிகளவர்கள் உங்களூர் மங்களக்கவிராயர் கந்தபிள்ளையவர்கள் வீட்டிலுள்ள ஏட்டுச்சுவடிகளையெல்லாம் எடுத்து நமது மடாலயத்திற்கனுப்பக்கடவாயென்றளித்த உத்தரவின்படி, ஆங்குநின்றும் வந்து நானும் மேற்குறித்த சுந்தரப்பிள்ளை முதலியோர்களும் மேற்படி மங்களக்கவிராயர் வீட்டிற்குச்சென்று அவரது புத்

திரருக்குப் பௌத்திரரான பார்த்தசாரதிப் பிள்ளையைக் கொண்டு ஏட்டுச்சுவடிகளை யெடுத்து அவைகளில் இராமபாணம் முதலியவைகள் நுழையாமல் செம்மையாயிருந்தவைகளைத்தேர்ந்தெடுத்து மேற்படிசுவாமிகள் சன்னிதானமனுப்பியவைகள் நீங்க மற்றவைகளை ஓர் கட்டாகக்கட்டி நதியில் வெள்ளம் வருங்காலத்தில் விடும்படி மேற்படி அப்பு முதலியார் வீட்டில் வைத்தனம். பின்பு வருணபகவான் கருணைபுரியாமையால் இரண்டுவருடகாலம்அச்சுவடிகள் இராமபாணங்களையும் செல்லென்னும் வெள்ளை யெறும்புகளையும் கூட்டிக்கொண்டு அப்பு முதலியார் வீட்டிலேயே வாழ்ந்துகொண்டிருந்தன. இதுகிடக்க, நிகழ்ந்த சௌமியஞு புரட்டாசிமீ 20உ ஏதோ ஒருவிஷயமாக மேற்படி அப்பு முதலியார் வீட்டிற்கு நான் போகநேர்ந்தது. அச்சமயம் அவர் அந்த ஏட்டுப்பிரதிகளை ஆராய்ந்திருந்தவர், இதென்ன? நகர்ப்புராணமென்றிருக்கிறதே; இதைப்பாரென்று என்பாலளிக்க, நான் அதை அன்போடேற்றுக் கண்ணுற்று இரண்டொரு ஏட்டைத்தள்ளி ஆராயுங்கால், காமநகர்ப்புராணமென்றேற்பட்டது. ஓ! ஓ!! இன்றுதான் இளம்பிறையீசன் திருவுளம்புரிந்தாரோ, முதலேட்டில் முதலிரண்டெழுத்தைப் பூச்சிகள் புசித்துவிட்டன என்று தீர்மானித்து மேற்படி புராணத்தை சிரமேற்கொண்டு பண்டுவருந்திய மனக்குறைவிண்டு களிப்பெனுங்கடலில் மூழ்கினேன். இன்னும் என் நண்பர்களுக்குக்காட்டி

அவர்களோடும் ஆனந்தித்தேன். நிற்க, அவ்வேட்டுப் பிரதியானது செல்துளைத்த புள்ளியன்றி மெய்யெழுத்திற்குப் புள்ளியேயில்லை. ஏடுகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டும், கரத்தால் தொடின் தூளாகும்படியாயுமிருந்தன. அவைகளைச் சீஷுகத்தியைக்கொண்டு விடுவித்துப்பார்க்குங்கால் முதலேட்டில் குளத்தூரிலிருந்த வடமொழிச் சுவடியைக் கொண்டு இருபத்தைந்து ரூபாய்கள் கொடுத்தெழுதியதென்றும், இதற்குச்சரியான பிரதியொன்று ம-ா-ா-ஸ்ரீ, ஜாகீர்தாரவர்கள் அரண்மனைக்கு அனுப்பப்பட்டதென்றும் கண்டிருந்தது. கடையேட்டில் சாலிவாகனவூ 1700 விளம்பிவூ சித்திரைமீ த்தில் எழுதி நிறைவேறியது என்றும் வரைந்திருந்தது. நிற்க, இத்தன்மையான ஏட்டுப்பிரதியைக் கொண்டு அல்லும்பகலும் அதேமுயற்சியாயிருந்து எழுத்தழிந்தவிடங்களில் முன்பின் ஒட்டிப்பார்த்தும் சிலகதைகள் முன்னமே தெரிந்திருப்பதால் சிறிதும் விடாது அதிககஷ்டப்பட்டெழுதி சிலநூதன துதிப்பாசுரங்களைச் சேர்த்தும் வெளியிட்டனன் ஆதலின் அறிவுடையார்யாவரும் இதிலுள்ள குற்றங்களைக்களைந்து குணங்களைக்கொண்டு மகிழ்வார்களெனச் சிவபிரான்றிருவடிகளைச் சிந்திக்கின்றனன்.

இங்ஙனம்,

**மு. சுந்தரன்,**

அடியார்க்கடியன்.

# சிறப்புப்பாயிரம்.

வேலூர் வூர்ஹீஸ்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான்
பு. க. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்களாலியற்றிய
விருத்தம்.

கங்கைமரபினில்வந்த சுந்தரன்வண்டமிழளக்கர்
காணும்வேட்கை
தங்கியவனற்குணத்த னலமுறுமங்களகவிப்பேர்
சார்ந்தோன்சீர்கள்
பொங்குறுகந்தப்பிள்ளை வரைகாமஙகர்தனக்காம்
புராணநூலாம்
அங்கினியகத்தியத்தை யச்சிட்டுத்தந்தனன்மற்
றன்பர்க்கன்றே.

வேலூர் சலவன்பேட்டையில் வசிக்கும்
தமிழ்ப்பண்டிதரும் ஷையூர் முனிசிபல் ஆபீசு
கிளார்க்குமாகிய ம-ா-ா-ஸ்ரீ,
வெ. சே. துப்புசாமி முதலியாரவர்களாலியற்றிய
நேரிசைவெண்பா.

கன்னித்தமிழ்மொழியிற் காமக்கூரின்சரிதை
மின்னனையாய்கந்தகவி விண்டனன்காண்-பின்னதனை
ஆய்ந்தச்சுக்கிந்தா னறிஞனுஞ் சுந்தரக்கோன்
தாய்போலும் வேளாளன் சாற்று.

ஆரணிஜாகீர்சம்புவராயநல்லூர் சோதிடர் ம-ள-ள-ஸ்ரீ
மா. முனிசாமிப்பிள்ளை அவர்களாலியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி விருத்தம்.

அலைமருவுகடல்புடைசூ ழவனியிலோரதிசயெனவே
யழகுகாட்டுந்
தலமருவுகாமநகர்ப் புராணமதைவடமொழியிற்
றயங்கக்கண்டு
இலகுதமிழ்மொழியதனிற் சொலவரைந்துவைத்திட்
டனெழிற்கந்தப்பன் [டா
நலமருவுசுந்தரவேளிதனை யச்சிற்பதித்தெவர்க்கு
நல்கினனே.

ஆரணிஜாகீர் காமக்கூர் ம-ள-ள-ஸ்ரீ,
பு. அப்பு முதலியாரவர்களாலியற்றிய
விருத்தம்.

சீர்சூதமுனிசௌன காதிமுனிவர்க்குமுன்
செய்யதிருவாய்மலர்ந்த
திருவிளம்பிறையுடைய நாயனார்பெருமையுறு
திகழ்காமநகர்ப்புராணம்
பார்மீதில்மங்களக் கவிராயரென்றுபேர்ப்
பகர்கந்தபிள்ளைதேவ
பாஷையைத்தமிழ்வசன மாயெழுதிவைத்துப்பின்
பழுதற்றபணியினேட்டைப்

பேர்மேவுசிவபிரான் றிருவருளினாற்சிறிது
பேதமில்லா மலாய்ந்து
பேரின்பமடையவச் சிற்பதிப்பித்தனன்
பேசிலக்கணமுணர்ந்தோன்
கார்மேவுகங்கைகுல திலகன்முத்துச்சாமி
கான்முளையெனச்சிறந்தோன்
கறைமிடற்றண்ணலடி மறவாமலேசொல்
கவின்சுந்தரப் புலவனே.

காமக்கூர் தமிழ்ப்பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ,
மு. சுந்தர முதலியாரவர்கள் மாணாக்கரிலொருவரான
ஷையூர் சோதிடம்
நா. முனிசாமி முதலியாரவர்களாலியற்றிய
அறுசீரடி விருத்தம்.

விண்கொண்டபொழிலுலவு காமநகர்ப்புராணமதை
விரும்பிமுன்னாள்
திண்கொண்டகந்தப்பக் கவிராயன்றமிழாக்கித்
தீட்டிவைத்த
எண்கொண்டபழமையுறு மேட்டையிரவும்பகலா
யினிதாராய்ந்து
கண்கொண்டவச்சிலிட்டா னென்றுகுருசுந்தரனுங்
கவிவல்லோனே.

போளூர்தாலூக்கா களம்பூர் ம-ா-ா-ஸ்ரீ,
சே. செல்லப்ப முதலியாரவர்களாலியற்றிய
அறுசீரடியாசிரிய விருத்தம்.

பூமகளுநாமகளும் பொருந்திவாழ்காமநகர்ப்
புராணமுன்னாள்
வாமமிகுகந்தப்பன்றமிழ்மொழியாலெழுதிவைத்தா
வருந்தியிந்நாள் [ன்
தாமநறுங்குழலமுத வல்லிபதிதாடொழுசுந்
தரனென்றோது
நாமகவியச்சிட்டு வெளிசெய்தபேருதவி
நவிலற்பாற்றோ.

இந்நூலைத் தென்மொழியிலெழுதிய மங்களக்கவிராயர்
கந்தப்பிள்ளையவர்கள் புத்திரருக்குப் பௌத்திரரும
வித்வான் கந்தசாமிப்பிள்ளை புத்திரரும் முள்ளிப்பட்டு
ரிஜல்டுபாடசாலை உபாத்தியாயருமான காமக்கூர்
ம-ா-ா-ஸ்ரீ, சரவணப்பிள்ளை அவர்களாலியற்றிய
ஆசிரியவிருத்தம்.

காமநகரச்சரிதை முன்னாளின் மங்களக்
கவிராஜகநதபிள்ளை
காசினுலகத்தோர்களுய்ய தமிழாக்கியே
கவினேட்டிலெழுதிவைத்துச்
சேமத்திருந்ததைத் தேடவதுசெல்லுண்டு
தென்பட்டபின்புசிலர்கள்

சீர்திருத்தித்தா வெனக்கேட்டவண்ணமே
திகழ்கங்கைமரபில்வந்து
பூமிதனில்மானிடர்கள் செய்திடும்பவமதைப்
போக்கிடுஞ்சிவனடியிணைப்
புகழுமுத்துச்சாமி மாதவத்தாலீன்ற
புண்ணியம்பூசுநேசன்
நாமங்கொள் சுந்தரப்புலவனாராய்ந்துள்ள
நவையொழித்தச்சிலிட்டு
நாவலர்கள் புகழவே கீர்த்தியுற்றான்மிக்க
நன்மையுடனோதற்கே.

காமக்கூர் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ,
மு. சுந்தரமுதலியாரவர்கள் மாணாக்கரிலொருவரும்
ஷெயூர் சோலையப்பிள்ளை குமாரருமான
அண்ணாமலைப்பிள்ளை அவர்களாலியற்றிய

அறுசீரடி விருத்தம்.

நீருலவுநிலவளஞ்சேர் காமநகர்ப்புராணமதை
நேடிமுன்னாள்
சீருலவுமங்களஞ்சேர் கவிராயன்கந்தப்பன்
தேசமுய்யப்

பாருலவுவடமொழியைத் தமிழ்வசனமாய்ச்செய்து
பரிவுகூர்ந்து
ஏருலவுமழியாத வேடதனிற்கரங்களினு
லெழுதினனே (௧)

தென்னுலவுமவ்வருநூற் பன்னாட்கடெரியாமற்
சிதைவுபட்டுக்
கொன்னுலவுபூச்சிகளா லெழுத்துச்சொற்களுமழிந்து
குறையுங்காலம்
மன்னுலவுசிவனருளாற் கிடைக்கப்பெற்றாராய்ந்து
வழுக்கணீக்கிப்
பொன்னுலவுமெழுதாத வெழுத்ததனிற்பதிப்பித்துப்
புகழுற்றுனே (௨)

அப்புலவன்யாரெனிலோ காமபுரியெனுந்தலத்தி
லன்பாயோங்குந்
திப்பியமாங்கங்கைகுலத் துதித்தமுத்துச்சாமியெனுஞ்
செல்வன்பெற்ற
நப்புலவர்சொற்றிடநன் னூற்கெளலாம்போதித்தென்
னவைகமூர்த்த
ஒப்பில்பரசிவனடியன் சுந்தரவேணுமென்ன
உயர்ந்தோன்மாதோ. (௩)

ஆரணிஜாகீர் காமக்கூர் தமிழ்ப்பண்டிதர்
மு. சுந்தர முதலியாரவர்கள் மாணாக்கரிலொருவரான
இரகுநாதபுரத்திலிருக்கும் நாகைபபட்டினந்தாலுக்கா
பெருங்கடம்பனூர்
து. நடேச நாட்டார் அவர்களாலியற்றிய
ஆசிரியச்சந்த விருத்தம்.

எண்டிசையும்புகழ் தண்டகநாட்டுக்
கெழிலுறுதிலகமதா
யிலகியகாமநகர்ச் சரிதந்தனை
யினிபதமிழ்ச்சொல்லாப்
பண்டையர்பங்கள கவிகந்தப்பண்
பனையேட்டினிலெழுதிப்
பகர்ருதிதியென வைத்ததையுலகு
படித்துயவாராய்ந்து
பண்டமிரும் வேலூரச்சிட்டான்
பகிரதிமரபதிபன்
பரிவொடுமுத்துச்சாமியளித்திடு
பண்புளசுகுமாரன்
தண்டமிழ்நூற்களையிருளறவன்பாய்ச்
சாற்றியவென்குரவன்
சந்திரசேகரனடிமுன் னிஞ்சுந்
தரநாவலனன்றே.

உ

கணபதி துணை.

# சருக்கங்களின் விவரம்.

1. கடவுள் வாழ்த்து.
2. புராணவரலாறு.
3. சந்திரன் பேறுபெற்ற சருக்கம்.
4. குமாரக்கடவுளருள்பெற்ற சருக்கம்.
5. விவஸ்வான் வலம்புரிந்த சருக்கம்.
6. இரதிதேவி வரம்பெற்ற சருக்கம்.
7. அத்திமலர்ந்த சருக்கம்.
8. அர்ச்சுனன் பாவந்தீர்த்த சருக்கம்.
9. சோழச் சருக்கம்.
10. காமக்கோட்டி சருக்கம்.
11. அமணச் சருக்கம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# காம நகர்ப்புராணம்.



## காப்பு.

### கலிவிருத்தம்.

உலகெலாமளித்தோங்குமுமையவள்
இலகுமாலுக்கியம்பிய சாபத்தை
விலகச்செய்தருள் வேழமுகத்தவன்
மலர்நிகரடி வந்தித்துய்வாமரோ.

# கடவுள் வாழ்த்து.



## சபாநாயகர்.

பதம்பெறநற் புலிமுனியும் பணிமுனியு மிருபுறத்தும்
பயந்துபரவ்
விதம்பரவ வுயிர்களெலாஞ் சுகமடைய வரியயனும
விதித்தவேலை
நிதம்பரவச் சிவகாம சவுந்தரிதான் மனங்களித்து
நிலவநாளுஞ்
சிதம்பரத்தி னடனமிடும் பரசிவத்தி னடிமலரைச்
சிந்திப்பாமே.

---

## இளம்பிறைநாயனர்.

பத்திதனை யுடையவர்கள் புத்தியினி லுடைபவனைப்
பரிவாய்வேட்குச்
சத்திதனை யளித்தவனைச் சத்தியொடுங்களிப்பவனைச்
சலனந்தீர

நத்திதனை நினைப்பவருக் கெத்திசையுந் தொழுங்காம
நகரிலோங்கு
முத்திதனைக் கொடுப்பவனையிளம்பிறைநாயகனடியை
முன்னுவாமே.



அமிர்தவல்லி.

மேலோங்கு மமரர்களு நூலோங்கு முனிவர்களும்
விரும்பியேத்துஞ்
சேலோங்கு புனல்வளங்க ளுறுங்காம புரியடியர்
சேவைசெய்ய

நாலோங்கு மறைபரவு மிளம்பிறைநா யகனொருபா
　　ணயந்துமேவு
மாலோங்கு விழியமிர்த வல்லியிரு சரணமலர்
　　வணங்குவாமே.

---

திரிபுரசுந்தரி.

பரிபுரத்தையொழித்தரியகதியடையத்தனைநினைக்கும்
　　பண்பினோருக்
கரிபுரத்தை யளித்தருளித்தெய்வதூ ஷணை புரியு
　　மறிவிலாருக்
கெரிபுரத்தை யளித்தருளிக்காமநகர்ச்சினகரத்து
　　ளிலகியோங்குந்
திரிபுரசுந் தரியினது பரிபுரஞ்சேர் பதயுகளஞ்
　　சென்னிசேர்ப்பாம்.



விஜயவிநாயகர்.

நந்திரங்க வனிதையர்க ணீர்குடையுங் கமண்டலமா
　　நதியின்றென்பால்

சந்திரனு தியர்பரவி யருளடைந்த காமபுரித்
தலத்துளோங்கும்
மந்திரத்து ளெழுந்தருளி முந்தினைப் பவர்க்கருளை
வழங்கிவாழு
மிந்திரனு தியர்வணங்கும் விஜயவிநா யகனிருதா
ளேத்துவாமே.



குமாரக்கடவுள்.

ஆறிருவிழிகள்போற்றி ஆறிருதடந்தோள்போற்றி
ஆறிருகரங்கள்போற்றி ஆறுவத்திரங்கள்போற்றி
வீறுவேல்போற்றிவெற்றி மேவியசேவல்போற்றி
ஏறுமாமயிலும்போற்றி யிணையடிபோற்றிபோற்றி.

---

வீரபத்திரர்.

ஈரபத்திரனை யெதிர்தக்கனைக்
கோரபத்திரங் கொண்டுசெகுத்திடு
நாரபத்திரை நாயகனாகிய
வீரபத்திரன் மெல்லடிபோற்றுவாம்.

## வயிரவக்கடவுள்.

சாயகமாதிகொண்டு சக்கராயுதனைக்கொன்று
தேயமேற்சருமம்போர்த்துச் செம்புனலினைக்கையேற்
றீயகஞ்சேரச்செய்து வெள்ளியங்கிரியிற்சென்ற [அ
நாயகன்வடுகமூர்த்தி நற்பதம்போற்றுவாமே.



## நந்திதேவர்.

வெண்மையுறு கைலாயமலை யெடுக்கத்துணிந்துமிக விரைந்துசென்ற
திண்மையுறு தசகண்டன் மதியாது தனையிகழ்ச்சி செய்தானென்று
தண்மையுறு குரங்குகளாற் குலத்தொடுநீ யழிவையெனச் சாபமீந்த [யெனச்
வண்மையுறு திருநந்தி தேவனடியிணைமலரை வழுத்திவாழ்வாம்.

நால்வர்.

நூல்வரம்புக ளாறுமதங்களைக்
கால்வரம்பிற் கடத்தித்தமிழ்மறை
மேல்வரம்பினின் மேவவிளம்பிய
நால்வர்பொன்னடி நாளும்வணங்குவாம்.

---

அறுபத்துமூவர்.

பாமேழான்பான் றுளையுள்ள நாற்றவுடல்போயொழியப் பழங்கண்செய்யுங் [கொளக்
காமேழான்பான் கோள்களையும் பொறிகளையு மடிமை கதியைக்காண
வூமேழான்பான் மணியிழைத்த திருக்கோயி லெழுந்தருமுமையின்காந்தன் [ளு
ஏமேழான்பானடியார்கள் பதமலர்க ளனுதினமு மிறைஞ்சுவாமே.

---

சேக்கிழார்.

அண்டர்புகழ் சிவபரனே தெய்வமென மறைநான்கு மறையக்கேட்டுங்
கொண்டமய லொழியாது பிறந்திறப்பார் களைமதி குழ்பிவீழுஞ் [த்துக்

சண்டர்களுங்கதியடையத்திருத்தொண்டத்தொகை தமிழினாலே [விரித்துத்
தொண்டர்புராணம்பகர்ந்த சேக்கிழானடிமலரைத் துதித்துவாழ்வாம்.

---

சந்தானகுரவர்.

இந்தான னம்விளங்கு பார்வதியை யொருபாக மிருத்திக்கொண்ட
கொந்தான விதழியணி சிவபெருமானருள்சிரமேற் கொண்டுபூவில்
வந்தான்மகோடிகளும் பிழைத்துய்ந்துவீடடையும் வழியைக்காட்டுஞ்
சந்தானகுரவரெனு நால்வர்களி னடிமலரைத் தலைமேற்கொள்வாம்.

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

உ

கணபதி துணை.

# காமநகர்ப்புராணம்.

## புராண வரலாறு.

முன்னொருகாலத்தில் நைமிசவனத்தில் சௌனகாதி முனிவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தர்ப்பாசனத்தில் வீற்றிருக்கும் சூதமுனிவரைப்பார்த்து வணக்கத்தோடு அஞ்சலிசெய்து இப்பூமியிலுள்ளபுண்ணிய தீர்த்தங்கள், தலங்களுக்குள்ளே நினைத்தமாத்திரத்தில் தீர்க்காயுசு, போகம், மோக்ஷம் இவைகளைக்கொடுக்கப்பட்டதும் பாபம், ரோகம், பயம் முதலியவைகளைப் போக்கப்பட்டதும் மகிமையுடையதுமான தலம் எதுவோ அதன்பெருமையைக் கேட்க விருப்பங்கொண்டிருக்கிறோமென்று சொல்ல அதைக்கேட்ட சூதபுராணிகர் தேவமானிடர்களால் பூஜிக்கப்பட்டதும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையுமளிக்கப்பட்டதும் எப்படிப்பட்ட பாவங்களையும் போக்கப்பட்டதுமான தலம் ஒன்றிருக்கிறது. அதுஎங்கேயென்றால் இந்தக் காசினியில் சிவாலயங்கள் அனேகமுண்டு, அவைகளில் மேன்மையான ஜவ்வாதிமலைக்குக் கிழக்கிலும் சேயாற்றுக்கு

வடக்கிலும் செந்தமிழாசிரியரான அகத்திய முனிவர் பிர திஷ்டைசெய்து பூஜித்துப்பேறுபெற்ற *முள்ளிக்காட்டிற்கு மேற்கிலும் பாலாற்றுக்குத் தெற்கிலும் கமண்டல நதிக்கரையில் காமபுரி யென்னும் பெயர்கொண்டு மகாசிறப்படைந்து விளங்கிக்கொண்டிருக்கிறது. இன்னும் அத்தலத்தில் எழுந்தருளிவிளங்கும் சிவலிங்கப் பெருமான் தானுயுண்டானவர். அங்கு ஐந்துதீர்த்தங்களும் இருக்கின்றன. ஈசானியதிக்கில் செட்டியென்னும் முருகக்கடவுளால் உண்டாக்கிய குமார தீர்த்தமும் கிழ்த்திசையில் விவஸ்வான் மகாராஜனால் உண்டாக்கிய வீராவளித்தீர்த்தமும் தெற்கில் விஜயனால் உண்டாக்கப்பட்ட அர்ச்சுனதீர்த்தமும் மேற்கில்சந்திரனால் பிரதிஷ்டை செய்யப்பட்டுப்பாவங்களையெல்லாம் தீய்க்கின்ற பாபந்தி தீர்த்தமும் ஜமதக்னி முனிவரால் இந்தமூன்று லோகத்திலுமுள்ள தீர்த்தங்களையெல்லாம் வேதமந்திரத்தால் தன்கமண்டலத்தில் ஆவாகனஞ்செய்து சாமுண்டீஸ்வரியால் உண்டாக்கிய அக்கினியை அடக்கும்பொருட்டு விடப்பட்ட கமண்டல நதியும் அத்தலத்தில்விளங்கிக்கொண்டு தன்பால்மூழ்குவோரதுபாவங்களையெல்லாம் அக்கினிமுன் பஞ்சுபோலஒழிக்கின்றன. அங்கேயெழுந்தருளிய சிவலிங்கப்பெருமானை சந்திரன், குமாரக்கடவுள், விவஸ்வான், இரதிதேவி முதலியோர் தொழுது அருள்பெற்றிருக்கிறார்கள். இன்னும் அந்த க்ஷேத்தி

*இது இப்போது முள்ளிப்பட்டென்று வழங்குகின்றது.

ரத்தின் பெருமையை அளவிட என்றால் முடியாது. ஆயினும் நீங்கள் அன்புடன் கேட்டபடியால் அத்தலத்தைப்பூஜித்துப் பேறுபெற்றவர்களின் சரித்திரங்களைசசொல்லுகிறேன். பக்தி சிரத்தையோடு கேளுங்களென்று சூதபுராணிகர் சொல்லத் தொடங்கினர்.

புராண வரலாறு முற்றிற்று.

## சந்திரன் பேறுபெற்ற சருக்கம்.

கேளுங்கள் சௌனகாதிமுனிவர்களே முற்காலத்தில் தக்ஷமுனிவனுக்கு நக்ஷத்திர ரூபமாயுள்ள இருபத்தேழு பெண்கள் பிறந்தார்கள். அப்பெண்கள் இருபத்தேழு பேர்களையும் சந்திரன் விவாகம் பண்ணிக்கொண்டான். பின்பு அவர்களில் உரோகணி என்பவளிடத்தில் மிகவும் விருப்பங் கொண்டு சுகித்திருக்குங்காலத்தில் மற்றைய பெண்களெல்லாம் மனஞ்சகியாதவர்களாய் துக்கங்கொண்டு தங்கள் பிதாவாகிய தக்ஷமுனிவனிடஞ்சென்று தங்கள் குறையைச சொல்லிக்கொண்டார்கள். அதைக்கேட்ட தக்ஷன் தன் மருகனாகிய சந்திரனை அழைத்து ஓ சந்திரா நீஒருபெண்ணினிடத்தில் ஆசையும் மற்றஇருபத்தாறு பெண்களிடத்தில் நிராசையும் வைத்தபடியால் நீஇதுமுதல் க்ஷயமடையக்கடவது என்று தக்ஷமுனிவன் சாபமிட்டான். அதுமுதல் சந்திரனானவன் ஒளிமழுங்கி வாட்டமடைந்து பதினைந்து கலைகளும் குறைந்துவதோருநன் மதியால்இந்நகரையடைந்து †பாபந்தீர்த்தத்தை யுண்டாக்கி அதில் மூழ்கி அந்த தீர்த்தத்தினால் சுயம்புநாதருக்கபிஷேகஞ்செய்வித்து சோடச உபசாரத்தோடு ஆராதனைபுரிந்து சங்கராபோற்றி, சம்புவேபோற்றி,

† இக்குளம் இப்போது பாப்பாத்திகுட்டையென்றழைக்குகின்றது.

சதாசிவா போற்றி, பொங்கரவணிந்த புராரியே போற்றி, யென்று நாத்தழும் பேறத்துதித்து நிற்கும்போது சுயம்பு லிங்கேசர் அப்பனுயகியோடு விடைமீதில் தோன்றி அப்பா, சந்திரா நீயென்னைக்கோரியது யாதுகாரணமென்று வினவ உடனே சந்திரன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து நடந்த சங்கதிகள் முழுதும்விண்ணப்பஞ்செய்ய அதைக்கேட்ட சுயம்பு நாதர் குறைந்துபோன பதினைந்து கலைகள் மாத்திரம் இனி பதினைந்துநாளுக்கு வளர்ந்தும் பதினைந்துநாளுக்குத் தேய்ந்தும்போகும் வளரும்நாள்களுக்குவளர்பிறையென்றும்தேயும் நாள்களுக்குத் தேய்பிறையென்றும் பெயர்வழங்கக்கடவது. அழியாதிருக்கும் ஒருகலையை மாத்திரம் இதோ நான் என் சிரத்தில் அணிந்துக்கொள்கிறேன். அக்கலை ஒன்றுமாத்திரம் என்றுமழியாது என்று விடைகொடுத்துவிட்டு மறைந்தார். உடனே சந்திரனும் ஆலயப்பிரதக்ஷணஞ்செய்து சுயம்பு நாதரையும் உமாதேவியையும் வணங்கித் தன் இருப்பிடம் போய்ச்சேர்ந்தான். அதுமுதல் சுயம்புநாதருக்குச் சந்திர சேகரரென்றும் இளம்பிறைநாயகரென்றும் பெயர் வழங்குகின்றது. அப்பாபந்தீர்த்தத்தில் மூழ்கினவர்களுக்கு எந்தப் பாவமும் நீங்குமென்பதற்குச் சந்தேகமேயில்லை. கேளுங்கள் சௌனகாதி முனிவர்களே இதற்குமேல்குமாரக்கடவுளருள் பெற்றசரித்திரத்தையும்சொல்லுகிறேன் பயபக்தியோடுகேட்பீர்களாகவென்று சூதமுனிவர் சொல்லத்துடங்கினர்.

# குமாரக்கடவுளருள்பெற்ற சருக்கம்.

ஒருகாலத்தில் குமாரக்கடவுள் உலகமுதலிய சராசரங்களையெல்லாஞ்சிருஷ்டிக்கும் பிரமதேவனை நோக்கி நீ சிருஷ்டித்தொழிலைச செய்கின்றாயே, உனக்கு குடிலைக்குப் பொருள்சொல்லத்தெரியுமாவென்றுகேட்டருளினார். அதற்குப் பிரமனானவன் வாய்திறவாமல் மயக்கங்கொண்டு நிற்கும்போது சேவலங்கொடியோன்கண்டு அந்தப் பிரமன் சிரங்கள் நான்கும் குலுங்கும்படி ஓச்சிக்குட்டி உனக்குப் பிரணவப்பொருள் தெரியாதிருக்கும்போது இந்தச்சிருஷ்டித்தொழிலை மாத்திரம் எவ்வாறு செம்மையாய்ச செய்வாய். இத்தொழில் உனக்கென்னத்திற்கு இனி அரை நிமிஷமுங் கூடாது. அத்தொழிலை நான் செய்கிறேனென்று உடனே அப்பிரமதேவனைச்சிறையிட்டுவிட்டார். அதன்பின்புதானே நெடுங்காலம் சிருஷ்டித்தொழிலைசெய்துக்கொண்டு வரும்போதுதேவர்களெல்லாம்கைலாயஞ்சென்றுசிவபெருமானைக் கண்டு அவர் திருவடிகளைவணங்கி நடந்தசங்கதிகளைச் சொன்னார்கள். அதைக்கேட்டருளிய கைலாசபதியானவர் உடனே செருத்தணிகையில்சுப்ரமணியரிடஞ்சென்று அப்பாபுத்ரசிகாமணி சிருஷ்டித்தொழிலை நீசெய்யவேண்டியகாரணமென்ன? நடந்தசங்கதியைச் சொல்லக்கடவாயென்றுகேட்க உடனே சுப்ரமணியர் தந்தையே. அச்[illegible]ழில்புரியும்

நான்முகனுக்குப் பிரணவத்திற்குப்பொருள் சொல்லத்தெரிய வில்லை, அக்காரணத்தால் அவனைச் சிறையிலடைத்துவிட்டு அதுமுதலாக அத்தொழிலை நான்செய்துக்கொண்டு வருகிறேன் என்று வணக்கமாய் விடைகொடுத்தருளினார். அதைக் கேட்ட கைலாசபதியானவர் அப்பாபுத்ரசிகாமணி உடனே பிரமனை விட்டுவிடுவாய் என்று ஆக்யாபிக்க தேவரீர் சொல்லுக்கு மீறிநடப்பேனா இதோ விட்டுவிட்டேனென்று சரவணப்பெருமாள் சொல்ல பின்பு சிவபெருமான் அக்குடிலைக் குப்பொருள் நீ சொல்லுவையோ என்ன நான் சொல்லுவேனென்று சரவணதேவன் சொன்னார். ஆனால் இப்போது அப்பொருளை எனக்குச் சொல்லவேண்டுமென்று பரமசிவன் கேட்க சரி அப்படியானால் தேவரீர் கேட்கவேண்டிய விதிப்படி கேட்பீரானால் உபதேசிப்பேன் என்று சொல்ல அவ்வண்ணமாகவே குமாரக்கடவுளை உயர்ந்த ஆசனத்தில் எழுந்தருளும்படிசெய்து சதாசிவமூர்த்தியானவர் தாழ்ந்துநின்று கைகட்டி வாய்பொத்திக்கொண்டு உபதேசஞ் செய்துகொண்டார். அப்படிஉபதேசித்தவுடனே குமாரனைப்பார்த்து நீயெனக்குமேல் சாமியாயிருந்து உபதேசஞ்செய்த காரணத்திற்காக நீபதினாறாயிரம்பிறவியெடுக்கக்கடவதென்று சாபமிட்டார். உடனே கந்தசுவாமியானவர் ஐயோநான் என் செய்வேன், என்செய்வேன் தெரியாமற் செய்த பிழையை மன்னிக்கக் கூடாதா, தேவரீர் இசசிறியேன்மீது கோபங்கொள்ளலாமா

யென்று அளவில்லாத வருத்தமடைந்து நிசாபதிக்கருள் செய்த இந்நகரத்தையடைந்து ஈசான்யதிக்கில் தன் பெயரால் ஒரு †தீர்த்தமுண்டாக்கி அத்தீர்த்தத்தால் சுயம்பு லிங்கமான இளம்பிறையீசனை ஆட்டியருச்சித்து நெடுநாள் தோத்திரஞ்செய்தார். பின்பு சந்திரசேகரக்கடவுள் எழுந்தருளி அப்பா குழந்தாய் உனக்கென்ன வேண்டுமென்று வினவ அதற்கு அந்தமயில்வாகனப்பெருமாள் சுவாமி தேவரீர் அடியேனுக்களித்த சாபத்தை நிவர்த்தி செய்யவேண்டியதுதான் வேறொன்றும் வேண்டியதில்லை யென்று பல பல விதமாகத் தோத்திரஞ்செய்து நின்றார். அதைக்கேட்ட கைலாசபதியாகிய சந்திரசேகரமூர்த்தி நான் கொடுத்த சாபத்தை நிவர்த்திக்க முடியாதென்று அருளிச்செய்தார். பின்பு வாமபாகத்திலிருந்த அப்பனாயகி யெழுந்திருந்து கை கூப்பி வணங்கி நின்று சுவாமி நமது செல்வனாகிய சுப்பிரமணியன்தேவரீர்சாபமிட்டபடி பதினாறாயிரம்பிறவியெடுத்து நம்மிடம் வந்து சேருவது எக்காலம், ஆகையால் அச்சாபத்தையழித்து மறுசாபங்கொடுக்கவேண்டுமென்று உமாதேவியானவள் பிரார்த்தனைசெய்ய அதற்கு இளம்பிறைநாயனார் மனதிரங்கி அப்பனே முருகேசா ஆனால் ஒன்று அருளிச்

---

†இது செட்டியென்னுங்குமாரக்கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதானதால் இப்போது செட்டிக்குளமென்று வழங்குகின்றது.

செய்கிறேன் அன்புடனே கேட்கக்கடவாய் உலகத்தில் சைவமதத்திற்கு விரோதமாக இருக்கும் பௌத்த சமண முதலிய மதங்களை வேரறக்களையவேண்டியிருக்கிறபடியால் நீபோய் சீகாழியில்பிராமணப்பிள்ளையாய் அவதாரஞ்செய்து யாம் எழுந்தருளி அன்பர்களுக்கு நான்காம்பதவியைத் தந்தருளும் ஆலயங்கடோறுஞ் சென்று பதினாறாயிரந்தேவாரப் பதிகங்களைச் செய்து துஷ்டமதங்களை முழுதும் ஒழித்துவிட்டு நம்மிடம் வந்து சேரக்கடவாயென்று உத்திரவளித்தார் பின்பு குமாரக்கடவுளும் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தார். கேட்டீர்களோ முனிவர்களே அந்நாள் முதலாக அத்தீர்த்தத்திற்கு குமாரதீர்த்தமென்று பெயருண்டாயிற்று. அதில் பக்திசிரத்தையோடு மூழ்கினவர்கள் இம்மையில் சகல செல்வங்களையும் பெற்று முடிவில் சுயம்புலிங்கேசன் திருவடியிற் கலப்பார்கள். ஒருசமயம் பயபக்தியில்லாமல் யாராவது மூழ்கும்போது அசுத்தத்தோடு அசட்டை செய்வாராஞல் அவர்கள் எழுநான்கு கோடி நரகங்களையும் அனுபவிப்பார்கள். இதற்குமேல்விவஸ்வான் வலம்புரிந்தசரித்திரத்தையுஞ் சுருக்கமாகச் சொல்லுகிறேன் நீங்கள் சிறிதும் பராமுகஞ்செயயாமல் கேளுங்களென்று சொல்லத்துடங்கினார்.

# விவஸ்வான் வலம்புரிந்த சருக்கம்.

கிருதயுகத்தில் அயோத்தியாபுரியை மனுநீதி வழுவாமல் செங்கோல் செலுத்திய சூரியகுலத்தரசனான விவஸ்வான் என்னும் மகாராஜன் தருமதேவதை நாலு பாதத்திலும் நடக்கவும் சிறியஎறும்புக்கும் துன்பநேரிடாமலும் சிவபக்தி மிகுதியோடும் இராசரிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு வரு கிறநாளையில் பாவங்களே ஓர்வடிவுகொண்டு வந்தாற்போல அதிசூரன் என்னும் பெயர்கொண்ட அசுரனொருவன் சது ரங்க சேனைகளையுங் கூட்டிக்கொண்டு வலியவந்து விவஸ் வானை யுத்தத்திற்கழைக்க உடனே விவஸ்வானும் தன் சேனைகளைச சித்தப்படுத்திக்கொண்டு ஒரு திவ்யமான இர தத்தின்மேல் ஆரோகணித்துக்கொண்டு போர்செய்யப்புறப் பட்டுவந்து இருவரும் எதிர்த்து நெடுநாள் போர்செய்து விவஸ்வான் தன் சேனைகளையெல்லாம் யுத்தத்திலே அதிசூர னால் தொலைத்துப்பின்பு தானும் தோற்று அந்த வீராவேசத் தினால் அநேக சிவாலயங்களைத் தரிசித்துக்கொண்டு வரும் போது இந்தக்காமநகரையடைந்து கார்த்திகைமீ சோமவா ரத்தில் பூசநக்ஷத்திரத்தில் ஓர் தீர்த்தமுண்டாக்கி அந்த தீர்த்தத்தில் மூன்றுறுநாள் மூழ்கி இளம்பிறைநாயனையும் அப்பனையகியையும் தினந்தோறும் வலம்புரிந்துகொண்டு வந்தான். அந்நாளில் ஒருநாள் சிவபிரான் அந்த விவஸ்வான்

கனவில்தோன்றி அப்பா விவஸ்வான்மகாராஜனே என்னிருப்பிடத்தைப்புதுக்கித்தருவாயாகவென்றுஅருளிச்செய்து மறைந்தார். உடனே விவஸ்வான் எழுந்திருந்துகடவுளருள் இப்படியும் இருக்கிறதல்லவா என்று பரமானந்தங்கொண்டு அன்றுமுதல் அதே கவலையாக இருந்து தகுந்த சிற்பிகளைக் கொண்டுவந்து ஆலயத்தைப் புதியதென்று கண்டோர் சொல்லும்படியாகச்செய்து முடித்து மகாதேவா, சதாசிவா, நீலகண்டா, அந்திவண்ணா, அரவாபரணா, பினாகபாணி, பேயோடாடி என்று பலவிதமாகத் தோத்திரஞ்செய்து நான் அதிசூரன் என்னும் சத்துருவுக்கு என் சேனையெல்லாம் பலிகொடுத்து நிராயுதபாணியாய்த் தோற்றோடிவந்து தேவரீருடைய அரியயனுங்காணாத சரணகமலத்தில் வீழ்ந்தேன். ஆனதால் அந்த பாவியான அதிசூரன் என்பவன் மாண்டொழியும்படியான ஆயுதம் அருளிசெய்யவேண்டும் தேவாதி தேவனே என்று நின்றான். பிறகு சந்திரசேகரமூர்த்தியானவர் அப்போதே ஒரு சூலாயுதம் நூதனமாக சிருஷ்டித்து அதை வாசற்படியில் வைக்கிறேன் நீ நாளைய உதயத்திற்கு வந்து எடுத்துக்கொண்டுபோய் உன்சத்துருவோடு சண்டைசெய்து வெற்றியடைந்து சிறிதுகாலஞ் செங்கோல் செலுத்தி வாழ்ந்து முடிவில் எம்பதவிக்கு வந்துசேரக்கடவாயென்று அந்தரவாக்களித்தார். பின்பு விவஸ்வான் அன்றிரவை ஓர் யுகமாகக்கழித்து மறுநாட்காலையில் எழுந்-

திருந்து தான் பிரதிஷ்டைசெய்த வீராவளிமுதலிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து ஜெபதபங்களை முடித்துகொண்டு இளம்பிறைநாதரையும் அப்பனுயகியையும் வலம் புரிந்து சிவபெருமானருளால் வாசற்படியிலிருந்த சூலாயுதத்தை யெடுத்துப் பொன்வஸ்திரத்தால்மூடி அதைச் சிரசின்மேல் தாங்கிக்கொண்டு சென்று தன்னுடைய பகைவனுகிய அந்த அதிசூரனை இந்த சூலாயுதத்தால் கொன்று தான் அயோத்தியாபுரி சேர்ந்து சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தான். கேளுங்கள் சௌனகாதிமுனிவர்களே அந்த விவஸ்வான் வீராவேசத்தால் பிரதிஷ்டைசெய்த தீர்த்தத்திற்கு † வீராவளி தீர்த்தமென்னும் பெயருண்டாயிற்று. அதில் மூழ்குவோர் இஷ்டசித்தியடைவார்கள். இதற்குமேல்காமன்பாரியாளான இரதிதேவி வரம் பெற்ற சரித்திரத்தையும் சொல்லுகிறேன் அன்போடு கேளுங்களென்று சொல்லத்துடங்கினர்.

## இரதிதேவி வரம்பெற்ற சருக்கம்.

முன்னொருகாலத்தில் தேவர்கள் சிவபெருமான் செய்யும் யோகத்தைக் கெடுப்பாயென்று மன்மதனைத் தூண்ட அம்மன்மதன் என்னசொல்லியுங்கேளாமல் பின்னுந் தேவர்கள் தொந்தரவுசெய்ய இப்படிப்பட்டவர்களோடு சகவாசஞ்

† இது இப்போது வீராப்புளிக்குட்டையென்று பெயர் வழங்குகின்றது.

செய்துகொண்டிருப்பதைக் காட்டிலும் அவ்விடஞ்சென்று முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானால் இறப்பதே நன்றென்று ஆலோசித்து உடனேசம்மதித்துக்கைலாசபதிசெய்யும் யோகத்தைப்புஷ்பபாணம்விடுத்துக்கெடுக்க அதற்காகச சிவபெருமான் நெற்றிக்கண்ணால் எரித்துவிட்டாரென்றும் அத்துன்பத்திற்காக அம்மன்மதன்பாரியாளான இரதிதேவி மிகவும்புலம்பியழுதாளென்றும் உடனேதேவர்களும்சென்று சூரபத்மன்செய்யும் துன்பங்களைசசொல்லி அவனைக்கொல்லுவதற்குச சீக்கிரம் உமாதேவியைச்சேர்ந்து ஒருபுத்திரனைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்று கேட்டார்களென்றும், அதற்குசசிவபிரான் அவவாறே இமயமாதைசசேர்ந்து ஒரு புதல்வனையளித்தனுப்புகிறேன்நீங்கள்சுகமாய்ப்போய்வாருங்களென்று அருளிசசெய்தாரென்றும் அதன்பிறகுமாங்கல்லிய பிசசையருளவேண்டுமென்று மகாதுக்கத்துடன்வந்த இரதிதேவிக்குச சிவபரன் ஓ பெண்ணே நாம் இமாசலபத்திரியை விவாகஞ்செய்துகொள்ளும்போது நீ அவவிடம்வந்து சேர்ந்து கேட்டுக்கொண்டால்அக்காலம்உன்கணவனை எழுப்பித்தருகிறேமென்று அருளிசசெய்தாரென்றும் முன்னொருகால் உங்களுக்குச சொல்லியிருக்கின்றேனல்லவா. அப்படியே இரதிதேவியானவள் தன்கணவன் உயிர்பெற்றெழுந்து வந்தாற்போல பாவனைசெய்து மகாசந்தோஷத்தோடிருக்கிற காலததில் ஒருநாளிரவில் சிவபெருமான் பிராமண வடிவங்

கொண்டு இரதிதேவியின்சொப்பனத்தில்வந்து ஓபெண்ணே நீ ஜவவாதிமலைக்குக் கீழ்த்திசையில் இரண்டுயோசனை தூரத்தில் கமண்டலநதிதீரத்தில் யாமருள்புரிந்து விளங்குந்தலத்திற்குவந்திருந்தால் பங்குனிமீ உத்திரநக்ஷத்திரத்தில் பார்ப்பதியைக் கலியாணஞ்செய்துகொள்ளப் போகிறோம் அப்போதுஉன் கணவனை அளிக்கிறோமென்று அருளிசெய்ததைக் கேட்டு மறுநாள்இரதிதேவியானவள் இந்தக்ஷேத்திரத்திற்கு வந்து உலகத்திலுள்ள புண்ணியதீர்த்தங்களைவிட மிகவும் மேலான கங்காநதியை நிகர்த்த கமண்டலநதியிற் சிவசிவவென்றுமூழ்கித் திருவெண்ணீற்றையணிந்து உருத்திராக்ஷமாலைதரித்துத் தினந்தோறும் நூற்றெட்டுப் பிரதக்ஷணஞ்செய்துகொண்டிருந்தாள். இப்படி வலம்புரியுங்காலத்தில் பங்குனிமீ உத்திர நக்ஷத்திரமுங்கூடிய சுபதினத்தில் அனேக வைபவங்களுடன் முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கள் கின்னரர் கிம்புருடர் கருடகாந்தர்வர் பிரமவிஷ்ணுக்கள் முதலிய சகலதேவர்களுஞ்சூழ இளம்பிறைநாயகருக்கும் அப்பநாயகி யென்னும் அமுதீஸ்வரிக்கும் விவாகம் நடந்தவுடன் இரதிதேவியானவள் அடியற்றமரம்போல் சாஷ்டாங்கமாக விழுந்து எழுந்துசங்கராபோற்றிசதாசிவாபோற்றி, மங்கையோர்பாகம் வைத்தவாபோற்றி கங்கையையணிந்தகடவுளேபோற்றி துங்கவெண்கலையோன் துதித்தவாபோற்றி எங்களாண்டவனே

இறைவனேபோற்றி கறையையணிந்த கர்த்தனேபோற்றி, தேவரீர் அன்று என்கனவில் ஒருபிராமண ரூபமாய்வந்து அருளிச்செய்தவண்ணமே இந்த நகரத்தையடைந்து ஒவ்வொருநாளும் தேவரீர் எழுந்தருளியிருக்கும் இந்தஆலயத்தை நூற்றெட்டுமுறை வலம்புரிந்துகொண்டிருந்தேன் ஆனதால் ஜெகதீசா இப்போது என்கணவனை எழுப்பியருளவேண்டுமென்று வணக்கமாய் வேண்டிக்கொண்டாள். பின்பு கருணைநிதியான இளம்பிறையீசர் திருவுளங்கொண்டு ஓபெண்ணே இரதிதேவி உன்கணவனுகிய மன்மதனை எழுப்பித்தருகிறோம். ஆனால் அம்மன்மதன் உனக்குமாத்திரந்தான் ரூபத்தோடு விளங்குவான், மற்ற விண்ணவர் மண்ணவர் முதலியோருக்கு ரூபமில்லாமலிருப்பான் என்று பஞ்சபாணனை மனதில் நினைத்தார். உடனே மன்மதன் கரும்புவில் புஷ்பபாணம் மச்சக்கொடி மதிக்கொடை கிளிவாகனம் முதலிய ஆடம்பரத்தோடும் மிகுந்த சௌந்தரியத்தோடும் வந்து சிவபெருமானை மும்முறைவலம்புரிந்து அவரது பாதாரவிந்தத்தில்வீழ்ந்து சுவாமி தேவாதிதேவனே மூவாமுதல்வனே முக்கண்ணனே பிறப்பில்லாதவனே இறப்பில்லாதவனே ஊரில்லாதவனே பேரில்லாதவனே முன்னில்லாதவனே பின்னில்லாதவனே குணமில்லாதவனே குறியில்லாதவனேதொழிலில்லாதவனே மேலில்லாதவனே ஒப்பில்லாதவனே என்உயிர்க்குயிரானவனே பாதகனுகிய நான் அந்ததேவர்கள்சொன்ன

தூர்ப்போதனையைக்கேட்டு வந்து தேவரீர்மீது புஷ்பபாணத்தைப்பிரயோகஞ்செய்தேன் நான் அறியாமையால்செய்தகுற்றத்தை மன்னித்தருளவேண்டுமென்று மிகவும் வணக்கத்தோடு ஒருபுறத்தில் ஒதுங்கிநின்றான். அவ்வாறு நின்ற இலக்குமிகுமாரனைப்பார்த்து ஏவிண்டுபுதல்வனே இதற்காக நீ வருந்தவேண்டாம். உன்னால் ஒன்றுமில்லை. மற்றயார் பேரிலும் தப்பிதஞ்சொல்லக்கூடாது. ஊழ்வினையின்படி நடந்துவிட்டது. ஆனால் இப்போது உனக்கொன்றருளிச் செய்கிறேன் அதாவது உன்மனைவியான இரதிதேவி கண்ணுக்குமாத்திரம் நீ உருவத்தோடு விளங்கி சுகமாகவாழ்ந்து மற்ற தேவமானிடர் முதலிய எவர்க்கும் இன்றுமுதல் அருவத்தோடு விளங்கக்கடவாயென்றருளியதைக்கேட்டுப் பின்பு காமனானவன் தன்பாரியாளுடன் சுயம்புலிங்கேசரை பலமுறைவணங்கி விடைபெற்றுக்கொண்டுதன்நகரத்தையடைந்தான். கேட்டீர்களோ சௌனகாதிமுனிவர்களே இரதிதேவியின் காமமாகிய இச்சையின்படி வரமளித்ததாலும் காமனையெழுப்பி அவனுக்கருள்புரிந்தகாரணத்தாலும் இந்த நகரத்திற்குக் காமநகரமென்றுபெயருண்டாயிற்று இதற்குமேல் இறந்துபோன ஒருபிராமணன் அத்தியானது அலரிமலரான அதிசயத்தைச் சொல்லுகிறேன் ஒருமனமாகக் கேளுங்களென்று சொல்லத்துடங்கினர்.

## அத்திமலர்ந்த சருக்கம்.

முற்காலத்தில் தென்னாட்டில் சதுர்வேதங்கள் முதலிய எல்லா நூற்களையுங் கற்றுணர்ந்து அவ்வண்ணமே சிறிதுந்தவறாமல் நடந்த சதுர்வேதி என்னும் பெயர்கொண்ட விப்பிரனொருவன் பிரதிதினமும் ஆகவனீயம் காருகபத்தியம் தக்ஷிணாக்னி யென்னும் முத்தீக்களையும் வளர்த்து அதனால் உலகத்திற்கு க்ஷேமகரத்தை உண்டுபண்ணிக் கொண்டு சாஸ்திரப்படி தாய்தந்தைகளை மிகவும்அன்புபாராட்டிப்போஷித்துக்கொண்டுவந்தான் அப்படிவருங்காலத்தில் ஓர்நாள் தந்தையானவர்சிவபதமடைந்தார். பிறகு அவரைத் தகனஞ்செய்து அவர்எலும்புகளை உறுப்புக்கு ஒவ்வொன்றாகப்பொறுக்கி ஓர்பாத்திரத்திலிட்டுசேமித்துவிட்டு அவர்க்குரிய கர்ம கைங்கரியங்களையெல்லாம் செய்து முடித்து அவரெலும்புகளை யெல்லாம் காசியென்னும் திவ்யக்ஷேத்திரத்திற்கருகிலுள்ள கங்காநதியில் கொண்டுபோய்ச்செலுத்த வேண்டுமென்று வேண்டிய திரவியங்களைக் கைக்கொண்டு துணைக்காக ஒரு அடிமையாளையும் அழைத்துக்கொண்டு பிரயாணமானார். அவ்வாறே காசியாத்திரை வருங்காலத்தில் சீகாழி சிதம்பரம் முதலிய புண்ணியத் தலங்களையெல்லாந் தரிசித்துக்கொண்டு இக்காமநகரத்தை யடைந்து இங்குள்ள சிவாலயத்தைத் தரிசிக்கவேண்டுமென்று பேரவாக்

கொண்டு ஸ்நானஞ் செய்வதற்காக கமண்டல நதிக்குச் சென்றார். நதிக்கரையில் சென்றவுடன் அங்கொரு ஆலமரத்தைக்கண்டு தான்கொண்டுவந்த எலும்பு முடிப்பைக் கீழே வைக்கக்கூடாதென்று அம்மரக்கிளையொன்றில் தொங்கும்படி மாட்டிவிட்டு அப்பா என் அருமைச்சகாயனே நீ இங்கே இருந்துகொண்டு இதை பத்திரமாய்ப்பார்த்துக்கொண்டிருப்பாய் மறந்தாகிலும் நீஇதைத்தீண்டாதே தொட்டுவிட்டால் உனக்குச்சாபங்கொடுத்துவிடுவேன் என்று தன்னோடுகூடவந்தவனுக்குப்பயமுறுத்தல்செய்துவிட்டு அந்தசதுர்வேதியென்னும்பிராமணன் ஸ்நானத்திற்குச் சென்றான், அப்படியவர் நீராடப்போனபின்பு காவலாக இருந்தவன் ஐயோஇதென்ன காரணம் நாம்இவருக்குச்சகாயமாய் இவ்வளவுதூரம் நடந்துவந்தும்இந்தபார்ப்பானுடைய கெட்டயெண்ணத்தைப்பார்த்தாயா கொஞ்சங்கூட நம்மை நம்பவில்லை சீ இவன் கெட்டானே பார்த்தால் என்ன போய்விடும் என்று மரத்தின் மேலேறி அந்தத்தூக்குமூட்டையைப் பார்த்தான். அதுமுழுமையும் அலரிமலரா யிருக்கக்கண்டு இந்த அலரிப்பூநமக் கென்னத்திற்கு இதைப்பார்க்கக் கூடாதென்று சொன்னானல்லவாயென்று ஆங்கோரிடத்தில் சும்மா உட்கார்ந்துக் கொண்டிருந்தான். உடனே சதுர்வேதியென்னும் அந்தணன் ஸ்நானஞ்செய்து ஜெபதபங்களை முடித்துக்கொண்டு கரைக்கருகேவரும்போது இங்கே காவலாயிருந்தவன் கண்டு

சுவாமி இந்த அலரிப்பூ எனக்கென்னத்திற்கு என் என்னைப் பார்க்கக்கூடாதென்று சொன்னீர்கள். விளைநிலங்களில் எளிதாகக்கிடைக்கும் இந்த அலரிப்பூவிற்கே இவ்வளவு கண்டிதம்உங்களிடத்திலிருந்தால்இன்னம் பொன் வெள்ளி முதலியபொருளாயிருந்தால் உங்கள்அதிகாரம்அப்போது எப்படியிருக்குமோதெரியாது. ஆ ஆ நியாயம் நன்றாயிருக்கின்றது. உங்கள் நடவடிக்கை இப்போதுதான் தெரிந்தது. பார்ப்பானை நம்பக்கூடாதென்று சொல்லுகிறார்களே அதற்குச் சரியாய்த்தானே செய்துவிட்டீர். இனிமேல் அரை நிமிஷங் கூட உனக்கும் எனக்குங்கட்டாது. நான் ஊரைப்போய்ச் சேருகிறேன் என்னை நம்பாத உனக்குச்சகாயங்கூடச்செய்யலாமாவென்று கடுங்கோபத்தோடு சொன்னான். அதைக் கேட்ட சதுர்வேதியானவர் எண்டா நீ அதைப்பார்த்துவிட்டாயோ, நீ அலரிப்பூ என்று சொல்வதனால் பார்க்கவில்லை போலிருக்கிறது. வீணாயேன் பரிகாசஞ்செய்கிறாய் என்று பிராமணன் சொல்ல அதற்குத்துணையாய் வந்தவன்சுவாமி எனிந்த புண்ணியத்தலத்திற்குவந்து பொய்பேசுகிறீர். நான்தான் இப்போது மரத்தின்மேலேறிமூட்டையைஅவிழ்த்துப் பார்த்தேன். அலரிப்பூவன்றி அதில் வேறொன்றுமில்லை என்று காவலாளிசொல்ல அதற்குப் பிராமணன் அடா அற்பப்பயலே அலரிப்பூவாயிருந்தால் என்னைத் தொடக்கூடாதென்றும்பார்க்கக்கூடாதென்றும்சொல்வேனா? அதல்லநான்

வேறொருபொருள்வைத்தேன் அதற்காகத்தான் உன்னைப் பார்க்கக்கூடாதென்று சொன்னேன். நீ இதற்காக என் கோபஞ்செய்கிறாய் என்று சொல்ல ஓ ஓ இனிமேல் பொருளை வைத்தேன் பொன்னை வைத்தேனென்று சொல்லி என்னை யேமாத்தப்பார்க்கிறாயோ நான் அவ்வளவு எமாந்தவனல்ல வென்று சொல்லி திடீரென்றெழுந்து தன் னூருக்குச்சென்று விட்டான். உடனே சதுர்வேதியானவர் என்ன வேண்டி வேண்டிக்கூப்பிட்டாலும் திரும்பிப்பாராமல் போய்விடவே ஆலமரத்திலேறி தான் வைத்த மூட்டையை அவிழ்த்துப் பார்த்தார். ஆ ஆ இதென்ன அதிசயம் நம் துணைவன் சொன்னது சரியாய்விட்டதே நாம் கொண்டுவந்து வைத்தது எலும்பாசசே இப்போது இது அலரிமலராயிருக்க வேண்டிய காரணமென்ன இத்தலத்தின் மகிமையோ அல்லது இளம்பிறைநாதன் திருவருளோவென்று சந்தேகங் கொண்டு நிற்கும்போது அப்பா சதுர்வேதி இந்தகமண்டல நதியானது கங்காநதி முதலிய அநேக புண்ணிய தீர்த்தங்கள் சேர்ந்து வந்த காரணத்தால் நீ கங்கையில் செலுத்தக் கொண்டுவந்த எலும்பானது இங்கு அலரிமலராயிற்று. ஆனால் அந்த கங்காநதியைவிட இந்தக்கமண்டலநதிக்குப் பெருமையதிகம். நீ இந்த மலரை இந்நதியில் செலுத்திவிட்டுப்போனால்கங்கையில்செலுத்துவதால் வருகின்றபேறுக்குப் பதின்மடங்கதிகமாயளிப்போம் உமக்கும்முடிவில் பேரின்ப

வீட்டையளிக்கத்தடையில்லை என்று அந்தரத்திலொருசப்தம் உண்டாயிற்று. அதைக்கேட்ட சதுர்வேதியானவர் ஆனந்தசாகரத்திலமூழ்கி பரவசங்கொண்டு அம்மலர் முழுதையும் கமண்டலநதியில் செலுத்திவிட்டுப் பயபக்தியோடு ஆலயத்துட்சென்று விஜயவிநாயகனை வணங்கி இளம்பிறையீசனையும் அப்பனுபகியையுந்தரிசித்துத் தன் ஆயுள்முடியும் வரையிலும் காமநகரத்திலேயே சிவதரிசனஞ்செய்துகொண்டிருந்து கடைசியில் சிவபெருமான் திருவடியடைந்தார். முனிவர்களே அக்காரணத்தினுலேதான் காசிநதியைக்காட்டிலும் கமண்டலநதி கால்பங்கு அதிகமென்றும் இக்காமநகரம் †காசிநகரமே என்றும் நிர்ணயஞ்செய்திருக்கிறது. இனி அர்ச்சுனன் பூசித்தகதையையும் சொல்லுகிறேன் கேளுங்களென்று சொல்லத்துடங்கினர்.

---

† இக்குறியினிடதுச சொல்லுங் கருத்தைக்கொண்ட அடியிற்கண்ட வடமொழிசசுலோகம் ஸ்தலபுராணமென்றே காமபுரியாலயத்தில் பாரம்பரியமாய் விப்பிரசிரோமணிகளால் ஓதப்பட்டுவருகின்றது. ஆதலின் முன்கண்டசுலோகம் இப்புராணத்தில் இசசருக்கமென்றே நினைக்கிறேன்.

சுலோகம்.

இதங்காமபுரீகாசி விஸ்வேஸோ சந்த்ரசேகரః
கமண்டலநதீகங்கா அமிர்தாம்பா அன்னபூர்ணிகா.

# அருச்சுனன் பாவந்தீர்த்த சருக்கம்.

மூன்றுவதுயுகத்தில் பாரதப்போர் நிகழுங்காலத்தில் பதினேழாம் நாட்போரில் கர்னனுடைய சேனைகளும் பாண்டவச்சேனைகளும் எதிர்த்துப் போர்புரியுஞ்சமயத்தில் கர்னன் அர்ச்சுனனுக்கு எதிர்வந்து வில்லைத்தொடுத்துநாணி யேறிட்டுத்தொடுக்கும்போது ஒன்று, விடுக்கும்போது பத்து, நடக்கும்போது நூறு, எதிரியின்மீது கிடக்கும்போது ஆயிரமாகவடிவங்கொள்ளும் மந்திரபலத்தையுடைய பாணத்தைப் பிரயோகித்தான். அதைக்கண்ட விஜயனும்காண்டீபத்தை எடுத்து நாட்டி பாணத்தைத்தொடுக்கும்போது அப்பாணந் தொடுக்க முடியாமல்போயிற்று. வில்லும் நழுவியது இதென்ன காரணமென்று பற்குனன் ஆராய்கின்றபோது கர்னனைப்பார்த்தால் தன் தமயனை தருமராஜனைப்போலிருந்தது. உடனே விஜயன் சுவாமி கிருஷ்ணமூர்த்தியே இந்தக் கர்னமகாராஜனைப்பார்த்தால் என் தமயனை உதிட்டிரமகாராஜனைப்போலிருக்கிறது என் வில்லும் நிற்கவில்லைபாணமும் வேகமாய்ச்செல்லாமல் தடைப்படுகின்றது. இனி நான் சண்டை செய்யமாட்டேனென்று பார்த்தன் கூறினான். பிறகு கிருஷ்ணமூர்த்தியானவர் *அப்பா அர்ச்சுனா நீ யேதோ பிரமைகொண்டு விட்டாய ஆனல் கொஞ்சம்நிதானித்தேசெய்ய

லாம் ஒன்றும் முழுகிப்போகவில்லை என்று கிருஷ்ணார்ச்சுனர்கள் இருவரும் தருமராஜன் இருக்குமிடத்திற்குப்போய்ச்சேர்ந்தார்கள். அந்த இருவரையுங்கண்ட தருமராஜன் கிருஷ்ணமூர்த்தியை நோக்கி இன்னுமா கர்ணனைக்கொல்லவில்லையென்று கேட்டார்? அந்தகிருஷ்ணமூர்த்தியானவர் அர்ச்சுனன் ஏதோ மயக்கங்கொண்டு யுத்தத்தைவிட்டு பின்னிட்டு வந்தான் என்று கண்ணபிரான் சொன்னவுடனே தருமராஜன் அடங்காத கோபங்கொண்டு இவன் என்ன வீரன், இவன் ஏந்திக்கொண்டிருப்பது என்ன வில், முருங்கைக்கொம்புக்குச்சமானமல்லவோ என்று கடுங்கோபமாகப்பேசினான். அதைக்கேட்டபற்குனன் கண்கள் சிவக்க நெருப்புப்பொறி பறக்க பற்களை நெறநெறவென்று கடித்து என்னையும் என்வில்லையும் இகழ்ந்தவன் எவனோ அவனை நான் கொல்லாமல் விடுவதில்லையென்று சபதஞ்செய்தான். உடனே கண்ணபிரான் அப்பா அர்ச்சுனா இதென்ன காலக்கேடு, நீபிறந்ததும் வளர்ந்ததும் அநேகநூல்கள் ஓதியதும் வீராதிவீரனென்றுபேர்வாங்கியதும்முன்பிறந்தவனைக்கொல்லுவதற்காகவோ, நல்லகாரியஞ்செய்தாய், இதுவரையிலிந்த திரிலோகத்திலும் தருமராஜன்விஷயத்தில் எப்படிப்பட்ட பெரியோர்களும் பயந்துகொண்டிருப்பார்களே யல்லாமல் உன்னைப்போல்எதிர்த்துநின்று பேசினவர்களேகிடையாது. நீயும் இதுவரையில் அவர்விஷயத்தில் ஒருதப்பிதமுஞ்செய்

யாமல் நன்னடக்கையோடுதானிருந்தாய். இப்போது அவ சரப்பட்டகாரணமென்ன எது எப்படியிருந்தாலும் பொறு மையைக்கைவிடலாமா என்று கிருஷ்ணமூர்த்தி சொல்ல பற்குனன் சுவாமி இப்போது ஒன்றும் சொல்லவேண்டாம். என் சபதந்தவறுகின்றது என்தமயன் தருமராஜனைக்கொல் லுவதற்காக வில்லில் பாணம் பூட்டினேன் இந்தசசமயத்தில் தாங்கள் தடுக்காதிருக்கும்படி கோருகிறேனென்றுசொல்ல உடனேகிருஷ்ணமூர்த்திஇதென்னவிபரீதம் அப்பா அர்சசுனு உன்னறிவையெல்லாம் எங்கேதாரைவார்த்துத் தத்தம்பண் ணிவிட்டாய், நீபடித்தபடிப்பெல்லாம் எப்போதுபாழாய்விட் டது, ஆ! ஆ!! இதல்லவோ சரியானதொழில், இந்த பாணத்தை உன் தமயன்மீது விட்டபிறகு நீமனுஷனும் விடுவையோ, இந்த உலகத்திலுள்ளமிருகங்கள் கூட உன்னை மதிக்காதே, புண்ணியத்தினுலே ஏதோ இந்த ஜென்மமெடு த்து ஒருவர்க்குங் கிடைப்பதற்கரிய பெருமைகளையெல்லாம் அடைந்து இந்தத்திரிலோகத்திலும் அர்ச்சுனனு என்று சொல்லும்படியான கீர்த்தியடைந்துவிட்டையே, இப்போது அவைகளெல்லாம் பாழாகத்தானே இந்த எண்ணங்கொண் டாய், வந்தவேலையைவிட்டு இந்தவேலையைச்செய்தால் அந்த வேலை இவனுல்முடியாமல் குந்திக்கொண்டானென்று உலக முழுதுங்கூடிவந்து சிரிக்காதோ, அப்பாபற்குனு இனிஇந்தத் துர்ச்செய்கையை விட்டுவிடு உன்சபதந்தவருதிருக்கும்படி

யாக ஒருயோசனை சொல்லுகிறேன் அதாவது என்னவென்றால் பெரியோர்களை வித்தியாசமாக தூஷித்துவிட்டால் கொல்லுவதற்குச்சமானமென்று வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது ஆகையால் நீஇரண்டொருசொல் குற்றமுண்டாகச சொல்லிவிடு, அதனால் உன்தமயனுக்கு ஒருகுறைவுயில்லை நீதான் இதை மூட்டைக்கட்டிக்கொண்டு சுமக்கவேண்டும், தவிரவும் நீகொன்றதுக்குச சமானமாய் முடிந்து அதனால் உன் சத்தியமுந்தவறாது என்று கிருஷ்ணமூர்த்தி நற்புத்தி சொன்னார். பின்புபற்குனன் அவர்சொன்னசொல்லுக்குடன் பட்டுத் தன்தமயன் தருமராஜன் முன்சென்று பெரியோனென்னும் முறையைச சிறிதும் பாராது அத்தருமன் மனம் நோகும்படியாய் சிலசொற்களைசசொல்லித் தூஷித்துவிட்டான். உடனே கிருஷ்ணமூர்த்தியானவர் இனி தாமதஞ் செய்தால் பாரதயுத்தத்திற்கு விரோதம்வருமென்றுநினைத்து அர்ச்சனனை யழைத்துக்கொண்டுபோய் பதினேழாம்நாட் போரையுமுடித்து பிறகு பதினெட்டாம் நாட்போரையு முடிப்பித்தவுடன் அர்ச்சுனனனவன் கண்ணபிரானோடு உல்லாசமாயிருக்கிறகாலத்தில் ஓர்நாள் சுவாமி கிருஷ்ணமூர்த்தியே நான் அன்று பதினேழாம்நாள் யுத்தத்தில் என் தமயன் தருமராஜனை மிகைபடும்படித் தூஷித்துவிட்டேனே அந்தபாவத்திற்கு நான் என்னசெய்வேன் உய்யும்வழியைக் காணேம் இதற்குத்தகுந்தஉபாயத்தைத்தாங்கள் தான் சொல்ல

வேண்டும் தேவரீரைவிட எனக்கு யாரிருக்கிறார்கள் என்று மனமிரங்கிக்கூறினான் அதைக்கேட்டகண்ணபிரான் அப்பா பற்குனா இந்த சங்கதியை நான் அப்போதே உனக்குச் சொல்லவேண்டுமென்று நினைத்தேன் மறுபடியும் நாம்வந்த காரியம் முடிவாகட்டுமென்று விட்டுவிட்டேன், நீகேட்டது சரியேகட்டாயம்அந்தபாவம் ஒழிவதற்குஉபாயந்தேடத்தான வேண்டும், அல்லாவிடில் நீரௌரவாதி நரகத்திற்கு ஆளாய் விடுவாய், ஆனால் தப்பித்துக்கொள்ளும்வழி ஒன்று சொல்லுகிறேன் கவனமாய் கேட்கக்கடவாய் அதாவது ஜவ்வாதி மலைக்குக்கிழக்கு பாலாற்றுக்குத் தெற்கு சேயாற்றுக்கு வடக்கு அகத்தியர் பூசித்த முள்ளிவனத்திற்குமேற்கு இதன் மத்தியில் கமண்டலநதிக்கரையில். தேவர்களால் பூஜிக்கப் பட்ட காமபுரியென்று ஒருதலமிருக்கிறது.அத்தலம் நினைத்த வர்க்கு நினைத்தபடியே யளிக்கவல்லது, அதிலெழுந்தருளி யிருக்கும் சிவபிரான் தானேயுண்டானவர், அப்பரமனுக்கு இளம்பிறைநாதரென்றும் சந்திரசேகரரென்றும் சயம்புலிங்கேசரென்றும் பெயருண்டு. இன்னும் அத்தலத்தின் பெருமையைச் சொல்லவேண்டுமென்றால் ஒருவராலும் முடியாது. உன்னுடையபேரால் ஒருதீர்த்தமுண்டாக்கி அதில் உற்பத்தியாகும் திருமஞ்சனத்தை இளம்பிறைசூடிய கடவுளுக்கபிஷேகித்து நீயும்பக்திசிரத்தையோடு அங்குள்ளதீர்த்தங்களில் மூழ்கித்தினந்தோறும் நூற்றெட்டு பிரதக்ஷணமாக ஒருமண்

டலம் வரையில் செய்துகொண்டு வந்தால் உன்தமயனை தூஷித்ததால் வந்தபாவத்தோடு முன்செய்த கன்மங்களும் காற்றின்முன் பஞ்சுபோல் பறந்தோடும் நீசென்று அவ்வாறே செய்யக்கடவாயென்று கிருஷ்ணமூர்த்தி யருளிச்செய்தார். உடனே அர்ச்சுனன் எழுந்து சுவாமி தேவரீர்சொன்னது மெய்யே அது எனக்குஞ்சம்மதமே நான்முன்னால் தீர்த்த யாத்திரைபோயிருந்தகாலத்திலும் அத்தலத்தை தரிசித்திருக்கிறேன் அதன்பெருமையுங் கேட்டிருக்கிறேனென்று விடைபெற்றுக்கொண்டு இந்தக் காமநகரத்திற்கு வந்தான். வந்தவுடனே இந்தத்தலத்திற்குத் தென்புறத்தில் †ஒருதடாகப் பிரதிஷ்டைசெய்து அதில்மூழ்கி அத்தீர்த்தத்தினால் இளம் பிறை சூடியகடவுளுக்கபிஷேகஞ்செய்வித்து ஒருமண்டலம் வரையில் தினந்தோறும் அநேகவலம் புரிந்துவருகிறகாலத்தில் ஒருநாள் அப்பா அர்ச்சுனா உன் பக்தியைக்கண்டுகளித்தோம் நீ செய்த பாவங்களெல்லாம் இன்றோடு கழிந்தன நீ சென்று சிலகாலம் வாழ்ந்திருந்து மரணாந்தகாலத்தில் எமது பதகிழலையடைவாயாக என்று ஓர் பேரொலியுண்டாயிற்று. அவ்வொலியைக்கேட்ட அர்ச்சுனனானவன் அஞ்சலி

---

† இக்குளக்கரையில் சில்மான சிவாலயமொன்றிருந்து அதிலுள்ளிருந்த இலிங்கம் இப்போது சிவாலயத்துள் ஓர் பக்கத்தில் வைக்கப்பட்டுப் பூசிக்கப்படுகிறது. இதனவிவரம் புராணஞ்சொல்லவில்லை.

செய்து ஆனந்தக்கூத்தாடி அந்திவண்ணா,அழலாடி, பாண்டரங்கா, பசுபதி, இளம்பிறையீசா, சுயம்புலிங்கேசா என்று பலவாறுதோத்திரஞ்செய்து திருவருளைச்சிந்தித்துக்கொண்டு தன் நகரம்போய்ச்சேர்ந்தான். முனிவர்களே அருச்சுனன் பிரதிஷ்டைசெய்த தீர்த்தத்திற்கு †அருச்சுனதீர்த்தமென்று பெயருண்டாயிற்று. இதற்குமேல் சோழச்சரித்திரத்தைச் சொல்லுகிறேன்கேளுங்கள் நைமிசாரண்யவாசிகளேயென்று சூதமுனிவர் சொல்லத்துடங்கினர்.

---

## சோழச் சருக்கம்.

முன்னொருகாலத்தில் ராஜாதிராஜனென ஜெயங்கொண்டசோழன் தலயாத்திரை செய்யவேண்டுமென்று விருப்பங்கொண்டு யானைகள்மீதிலும் ஒட்டைகள்மீதிலும் வேண்டியதிரவியங்களைப் போட்டுக்கொண்டு சென்று இராமேச்சுரம், கதிர்காமம், பழநி, திருக்குற்றாலம், திருப்பெருந்துறை, சிராப்பள்ளி, திருவாரூர், திருக்கடையூர், சிதம்பரம், பேரூர், திருவதிகை, திருப்பாதிரிப்புலியூர், திருக்கோவலூர், திருவெண்ணைநல்லூர், திருவண்ணாமலை முதலிய அநேகசிவாலயங்களைத்தரிசனம்பண்ணிக்கொண்டு சந்திரன் முதலியோர்

†இது இப்போது தாமரைக்குளமென்று வழங்குகின்றது.

ரால் பூஜித்துப் பேறுபெற்ற இந்தக்காமநகரத்தையடைந்து இங்குள்ள கமண்டலநதி முதலிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து ஜெபதபங்களை முடித்துக்கொண்டு ஆலயத்திற்குள் சென்று விஜயகணபதியை முன்னம் வணங்கிக் கைகூப்பிக் கொண்டு பிறகு இளம்பிறைநாயனுரையும் அப்பனுயகியையும் தொழுது அக்காமநகரத்திலே தங்கியிருந்துஆலயத்தைப்பிர தக்ஷணஞ்செய்துகொண்டிருந்தான். அக்காலத்தில் ஒர்நாள் அந்தஜெயங்கொண்ட சோழன் கனவில் இளம்பிறைநாயனுர் தோன்றி அன்பனே நீபேரரசனுகையால் கிலமாயிருக்கும் எம்முடைய ஆலயத்தையும் இதற்கருகில் கீழ்த்திசையில் அகத்தியமுனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட முள்ளிக் காட்டையும் சீர்திருத்திவிட்டு அப்பால் செல்லக்கடவாயென்று ஆக்யாபித்தருளினுர். திடீரென்று நித்திரைவிட்டெழுந்து இளம்பிறையீசன் திருவருள் இவவண்ண மிருக்கிறதல்லவா என்று ஆனந்தக்கண்ணீரொழுக அந்தரா, சந்தரா, நிரந்தரா, துரந்தரா, ஆதியே, சோதியே, அமலனே, விமலனே, அற்புதா, பொற்பதா, ஆலமுண்டோனே, சூலங்கொண்டோனே, ஆரணு, காரணு, ஜயனே, மெய்யனே, யென்று சிவபரஞ்சுடரைத் தோத்திரஞ்செய்து அன்று முதலாக அதேகவலேயாயிருந்துகொண்டு பல தேர்ந்தசிற்பிகளைக் கொண்டுவந்து அநேகமாயிரந்திரவியங்களைச செலவழித்துத் திருமதில் கோபுரம் கலியாணமண்டபம் மஹாமண்டபம்

அந்தராளம் கெற்பக்கிரகம் யாகசாலை மடப்பள்ளி முதலிய வைகளையெல்லாம் சீராக்ப்புதுப்பித்துச் சுவாமிக்கு நித்ய நைவேத்ய பூஜைக்காகவைக்கோளன் தாங்கலென்னும்புரியை யும் தினந்தோறும் ஐந்நூறு தீபமிடுவதற்காக புங்கம்பாடி யென்னும் நகரத்தையும் தானஞ்செய்து மேளதாளம் பூரி சின்னம்முதலிய வாத்தியங்களையும் கணிகைமாதர்கள் வேத வேதியர் முதலியவர்களையும் இன்னும் மற்ற சிவத்தொண்டு செய்யும் பரிசனங்களையும் ஏற்படுத்தி அவரவர்களுக்குத்தக்க படி நிலங்களை இறைமாக விட்டுப் பின்பு கீழ்த்திசையிலுள்ள முள்ளிக்காட்டைத்திருத்தி அங்குள்ள சிவலிங்கப்பெருமா னுக்கு ஆலயங்கட்டி முடித்து அவ்வாலயத்திற்கு அருச்சகர் முதலியபரிசனங்களை ஏற்படுத்தி அவரவர்களுக்கு வேண்டிய நிலங்களைவிட்டு மறுபடி காமபுரிக்குவந்து புராந்தகாபோற்றி பூதநாதா போற்றி, வாமதேவாபோற்றி, நீலகண்டாபோற்றி, நிருமலா போற்றி, நிரந்தரா போற்றி, நிராமயா போற்றி, நிராலம்பாபோற்றி, நிர்க்குணபோற்றி, நிரஞ்சனபோற்றி, நிர்விகாரபோற்றி, அப்பனே ஒப்பிலாமணியே, ஓங்கார தேவா, இப்பொழுதென்னையாட்கொள்ளவேண்டும் அடியே னுன்னடைக்கலம் என்று பலவாறு தோத்திரஞ்செய்து நான் இங்குவந்து நீண்டகாலமாய்விட்டது, தேவரீர்கட்டளை யிட்டபடியே திருப்பணிகளை நின்திருவருளின்படி நடத்தி விட்டேன், இன்னும்மற்ற சிவாலயங்களையும் தரிசிக்கவேண்

டும். நின் திருவாக்கையெதிர்பார்த்துக்கொண்டிருக்கும் அடியேனுக்கருள் செய்யவேண்டும் என்றுபிரார்த்திக்க உடனே சிவபெருமான் அந்தரத்தில் விடையின்மீது அமிர்தாம்பிகை வாமபாகம் விளங்கும்படி தரிசனந்தந்து நீ யாமெழுந்தருளியிருக்கும் ஆலயங்களெல்லாம் தரிசனஞ்செய்துவிட்டு முடிவில் இவ்விடம்வந்தால் எம்பதவி யளிக்கிறோமென்று அருளிச்செய்துவிட்டு மறைந்தருளினார். பின்பு ஜெயங்கொண்டசோழன் வடதிசை நோக்கிச்சென்று திருவலம், திருக்காளத்தி முதலிய தலங்களெல்லாந் தரிசித்து வடபெண்ணை, கோதாவரி, கிருஷ்ணாநதி முதலியநதிகளிலெல்லாம் முழுகிக் கடைசியில்இந்தக்காமபுரிக்ஷேத்திரத்தில் வந்து தினந்தவறாமல் பயபக்தியோடு சிவத்தொண்டு புரிந்துகொண்டிருந்து மரணாந்தகாலத்தில் இளம்பிறையீசன் திருவடியடைந்தான். முனிவர்களே இதற்குமேல்காமக்கோட்டியின்சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்களென்று சொல்லத்தொடங்கினார்.

---

## காமக்கோட்டி சருக்கம்.

கேளுங்கள் சௌனகாதிமுனிவர்களே பூர்வத்தில் இத்தலத்தில் பதினாறு கணிகைமாதர்கள் ஒவ்வொரு நாளும் இளம்பிறையீசன் திருவாலயத்தில் தொண்டு புரிந்துகொண்டுவந்தார்கள். அப்பதினாறுபேர்களில் காமக்கோட்டி

யென்னும் பெயர்கொண்ட ஒரு கணிகைமாதானவள் கல்வியிலும் செல்வத்திலும் ரூபத்திலும் சிறந்தவளென்று எல்லாரும் புகழும்படி வாழ்ந்துகொண்டிருந்தாள். இதைக்கண்ட பதினைந்து கணிகைப்பெண்களும் அக்காமக்கோட்டியென்னுங் கணிகையின்மீது பொருமைகொண்டு இவளையெப்படியாவது கோவில்படியேறவொட்டாமல் தடுத்துவிடவேண்டும் இல்லாவிட்டால் இவளிருக்கிறவரையில் நமக்கெல்லாம் சிறிதும் மேன்மையுண்டாகாது என்று எண்ணங்கொண்டு நீண்டகாலமாய் சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் ஓர்நாள் காமக்கோட்டியானவள் கமண்டலநதிக்கு ஸ்நானத்திற்குப்போகுங்காலத்தில் வழியில் காமநகரத்தைக் காவல்செய்யுந்தோட்டியானவன் எதிர்ப்பட்டான். அவனோடு காமக்கோட்டியானவள் சிலவேலையின் நிமித்தமாகப்பேசும்படிநேரிட்டது. அவ்வாறு இருவரும் பேசிக்கொண்டிருக்கிற காலத்தில் வேறொரு கணிகைமாதானவள் நீராடும்நிமித்தமாக அவ்வழியேபோனாள். போகும்போது தோட்டியும் காமக்கோட்டியும் பேசிக்கொண்டிருப்பதைக்கண்டு அப்பால் ஒதுங்கிச்சென்று நதியில் நீராடிப்பின்பு வீடுவந்துசேர்ந்து மற்றைப்பெண்களையெல்லாங் கூட்டிக்கொண்டு அடீமாதர்களே சங்கதிதெரியுமா காமக்கோட்டிநீசனைவைத்துக்கொண்டிருக்கிறாள், தினந்தோறும் கூசமில்லாமல் பேசிக்குலாவுகிறாள், நான் இன்றுதான் நேரில் பார்த்தேன், அப்படிப்பட்ட

கெட்ட நடத்தையுள்ளவள் எப்படி நம்மோடுகூட ஆலயப் படியேறலாம் என்று கலகஞ்செய்தாள். அதைக்கேட்ட மற்றைக் கணிகைமாதர்கள் ஆனால் நமது சோழமகாராஜனிடஞ்சொல்லி அந்தக்காமக்கோட்டியை நீக்கிவிடவேண்டுமென்று கணிகைமாதர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்துபோய்ச் சோழமகாராஜனிடம் விண்ணப்பஞ்செய்ய அதை அந்தச் சோழராஜன் கேட்டுக்கணிகைமாதர்கள் பதினறுபேரையும் வரவழைத்து விசாரணைசெய்துவந்ததில் நீசனைசேர்ந்ததாக அக்காமக்கோட்டியின்மீது குற்றம் ஏற்பட்டதால் அடீ காமக்கோட்டி நீ இனிமேல் சிவாலயத்தொண்டு செய்யக் கூடாதென்று கட்டளையிட்டான். அதைக்கேட்ட காமக் கோட்டியானவள் ஐயையோ இதென்ன அநியாயம், நான் ஒரு பாவத்தையும் அறியேனே, இதுவும் விதிதானே என்று அழுதுகொண்டு வந்து வருணதிக்கிலுள்ள பாவந்தீர் தீர்த்தத்தில் மூழ்கிச சிவாலயத்திற் கெதிர்வந்துநின்று அரகரா சிவசிவா, மகாதேவா, சம்போசங்கரா, தற்பரா, தயாபரா, நிரந்தரா, துரந்தரா, திகம்பரா, சுந்தரா தேவரீர் முப்புரத்தை யெரித்தது சத்தியமானல் என்முன்னிற்கவேண்டும். எமனை யுதைத்தது சத்தியமானல் என் எதிர் நிற்கவேண்டும். உன்னையறியாமல் நான் ஒரு குற்றமுஞ் செய்யவில்லை தேவரீரே இவ்வேளை காத்துரக்ஷிக்கவேண்டும் என்று முறையிட்டழுதாள். உடனே சிவபெருமான் பெண்ணே நீ விசனப்

படாதே இது முதல் நீயே எனக்குத்தொண்டு செய்யும்படிக்கும் கடைசியில் நீயென் பதமடையவும் அருள்புரிவோம் என்றுஆகாயத்தில் ஒருஓசை உண்டாக்கினார். அதைக்கேட்ட காமக்கோட்டியானவள் மிகவுங்களிப்புற்று ஆனந்தக்கூத்தாடிக்கொண்டு தன்வீடுபோய்ச்சேர்ந்தாள். அப்பொழுதேஉண்மையறியாமல் தீர்ப்புசெய்தசோழராஜனுக்கும் பொறாமைப்பட்டுப்பொய்சாக்ஷி சொன்ன கணிகைமாதர்களுக்கும், ஓர் விஷஜுரத்தையுண்டுபண்ணி அவர்களை வெதுப்பும்படிக் கட்டளையிட்டார். உடனே அந்தவிஷஜுரமானதுசென்று அந்தச்சோழராஜனையும், கணிகைமாதர்களையும் வருத்துங் காலத்தில் சோழராஜனானவன் இளம்பிறையீசனை நினைத்து நமசிவாயா, நான்மறைவாயா, அடியவர்நேயா, அமரர்சகாயா மான்மழுக்கையா, மாதவத்துய்யா, நீறணிமெய்யா, நித்திய வையா, அம்பிகைலோலா, ஆதியேமூலா,உம்பர்சொல்சீலா, உயர்திரிசூலா, மங்கையோர்பாகா, மந்திரயோகா, துங்க விவேகா, சுகமிருயோகா என்று ஆனந்தக்கண்ணீரொழுக, தோத்திரஞ்செய்த காலத்தில் அவன் சொப்பனத்தில் சிவபிரான்தோன்றி அப்பா சோழராஜனே ஒரு பிழையுஞ்செய்யாதிருந்த காமக்கோட்டியென்பவளை சிவத்தொண்டு செய்யக்கூடாதென்றுதண்டனைசெய்தகுற்றத்திற்காக உனக்கிந்த துன்பத்தைக்கொடுத்தோம்; இனிமேலாவது நீ நீதியறிந்து நடத்தாவிட்டால் உன்னைவிட்டு இந்த நோய்நீங்காது என்

றருளிச்செய்துவிட்டு மறைந்தருளினர். மறுநாட்காலையில் அரசனெழுந்துகணிகைமாதர்கள் எல்லாரையும்வரவழைத்து அடிகணிகை மாதர்களே இதுமுதல் காமக்கோட்டியே சிவாலயஞ்சென்று சுவாமி பணிவிடைகளைச் செய்யவேண்டியது. நீங்கள் பதினைந்து பேர்களும் பொய்சாக்ஷி சொன்னதாக சிவபிரான் நடந்த இரவில் என் கனவில் அருளிச்செய்தார். ஆகையால் நீங்கள் பதினைந்து பேரும் எக்காலமும் சிவாலயத்திருத்தொண்டுகளைச் செய்யக்கூடாதென்று உறுதியான கட்டளையிட்டான். உடனே சோழராஜனும் ஜுரநோய்நீங்கிச்சௌக்கியமடைந்தான் அதுமுதல்காமக்கோட்டியானவள் தினந்தோறும் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி திருவெண்ணீற்றையும் உருத்திராக்ஷ மணிகளையுமணிந்துகொண்டு பஞ்சாக்ஷர ஜெபஞ்செய்து சிவாலயப்படியேறி அங்குள்ள சிவத்தொண்டுகளைத் தவறாமல்பயபக்திவிஸ்வாசத்தோடு செய்துகொண்டுவந்து அந்தியத்தில் சிவபெருமான் திருவடியடைந்தாள். கேளுங்கள் முனிவர்களே காமக்கோட்டியென்னும் கணிகைமாதுக்கு அருள்புரிந்த காரணத்தால் இத்தலத்திற்கு †காமக்கோட்டிபுரமென்று ஒரு பெயருண்டாயிற்று. அதுமுதல் காமக்கோட்டியின் சந்ததியார் மாத்திரமே இன்னும் சிவத்தொண்டுக்கு உரியர்களாயிருக்கின்றார்கள். மற்றைப்பதினைந்துகணிகைமாதர்களின் சந்ததி

† இது இப்போது காமக்கூர் என்று மருவி வழங்குகின்றது.

யானது பொய்சத்தியஞ்செய்த காரணத்தால் முழுதும் அற்றுப்போய்விட்டன. இனிமேல் அமணன் என்னும் அரசன் சாபவிமோசனமான சரித்திரத்தைசசொல்லுகிறேன் சௌநகாதிமுனிவர்களேயென்று சூதபுராணிகர் சொல்லத்துடங்கினர்.

## அமணச்சருக்கம்.

மூன்றாவதுயுகத்தில் அமணன் என்னும் சந்திரகுலத்தரசனொருவனிருந்தான். அவ்வரசன் ஒருநாள் வேடிக்கையாக வேட்டையாடும்பொருட்டு வனத்திற்சென்று அங்குள்ள வேடிக்கைகளைப்பார்த்துக்கொண்டு வரும்போது ஓரிடத்தில் குரங்குகள் கூட்டங்கூட்டமாக வாசஞ்செய்வதைக்கண்டு இந்தக் குரங்குகளில் இரண்டொன்று பிடித்துக்கொண்டு போய் நமது நகரத்தில் வேடிக்கையாக வளர்க்கலாமென்று ஆலோசித்துத்தன் னோடுகூட வந்தவர்களை ஒவ்வொரு பக்கத்திலும் அனுப்பி எவ்விதமாவது இரண்டு குரங்குகளைப்பிடித்துக்கொண்டுவாருங்களென்று கட்டளையிட்டுவிட்டுத் தானும் ஓர் பக்கத்திற்சென்றான். அவ்வாறு சென்ற அமணன் அங்குள்ள ஆலமரம் ஒன்றில் அநேக குரங்குகள் சஞ்சரிப்பதைக் கண்டு அவைகளில் எதாவது ஒன்றைப் பிடிப்போமென்று எண்ணி அம்மரத்தின்மீது ஏறினன். அவ்விதமாக அவ்வா

சன் ஏறும்போது அந்த ஆலமரத்தினடியில் ஐம்பொறிகளை யடக்கி நெடுநாளாய்த்தவம் புரிந்துகொண்டிருந்த ஒரு ரிஷியின் சிரத்தின்மீது அந்த அமணராஜன் இடதுகால் பட்டது. உடனே முனிவர் விழித்துப்பார்த்துக் கடுங் கோபங்கொண்டு அடாபாவி நீ குரங்கைப் பிடிக்கவந்த வைபோகத்தால் என்னை மதியாமல் உதைத்தாயல்லவா ஆகையால் நொண்டிக் குரங்காகப்போகக்கடவது என்று சாபமிட்டார். அதைக்கேட்ட அமணன் விரைவாகமரத்தி லிருந்து கீழே குதித்து மனம் வருந்தியழுதுகொண்டு சுவாமி தேவரீர் இங்குத்தவம் புரிவதை நான்கவனிக்க வில்லை. தெரியாமற்செய்த பிழையை மன்னிக்கவேண் டும் என்று பலமுறை வணங்கிக்கேட்டும் முனிவரான் வர் நாமிட்ட சாபத்தை நீ அனுபவித்தே தீரவேண்டும். இப்போது அனுக்கிரகம் செய்யமுடியாது என்று மறுத்து விட பிறகு அமணன் இனியென்செய்வேன் என்செய்வே னென்று தன்விதியை நொந்து வருந்திசுவாமி தேவரீர் இப்போது எனக்குக்கொடுத்த இச்சாபமானது எக்காலம் எவ்விடத்தில் நிவர்த்தியாகும் அதையாவது அருளிச்செய் யுங்களென்று சாஷ்டாங்கமாக விழுந்து கேட்டுக்கொண் டான். அதன்பின் முனிவர் மனமிரங்கி அப்பா அமண ராஜனே நீ எப்போது எவ்விடத்தில் குமாரக்கடவுளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தடாகத்தில் மூழ்குவையோ

அப்போது அவ்விடத்தில் இந்தக்குரங்குவடிவம் நீங்கிசசுய ரூபம் பெறுவாயென்று அருளிச்செய்தார் அதைக்கேட்ட உடனே அமணராஜன் குரங்குவடிவம் பெற்று மலைகள் முதலிய வனாந்தரங்களில் சஞ்சரித்துக் காய்கனிகளைப் புசித்து நீண்டநாள் கழித்து இந்தக்காமநகரத்தின் வட புறத்திற் செட்டியென்னுங் குமாரக்கடவுளால் சிருஷ்டிக் கப்பட்ட தடாகக்கரையோரமாக வரும்போது பாதிராத்திரி யாகையாலும் சாபம் நிவர்த்தியாகும் காலம்வந்து நேர்ந் திருப்பதாலும் அக்குரங்கானது தடுமாறி அத்தீர்த்தத்தில் விழுந்தது. விழுந்தவுடனே குரங்குவடிவம் நீங்கி பழைய வடிவம் வந்தது. பின்பு குரங்காயிருந்த அமணராஜன் மறு நாட்காலையில்அத்தீர்த்தத்தில் செம்மையாகஸ்நானஞ்செய்து விபூதிருத்திராக்ஷமணிந்து தான் செய்யவேண்டிய நித்திய கடன்களை முடித்துக்கொண்டு சிவாலயத்திற்குள் நுழைந்து முன்னிட்டு விஜயகணபதியைவணங்கிப்பிறகு சந்திரசேகரக் கடவுளையும்அமுர்தவல்லியையும்தொழுது அநேகநாள் காயபுரி யில்தங்கியிருந்து எல்லாத்தீர்த்தங்களிலும்மூழ்கித் தினந்தோ றும்சிவாலயத்தை வலம்புரிந்துதேவதேவா, மகாதேவா,முக் கண்ணா, கருணாகரா, சம்போ, சதாசிவா, இளம்பிறைநாதா, களங்கறையீசா, காமபுரிவாசா, நான் முன் ஜென்மத்தில் சிறிது பாவம் செய்து ஒரு ரிஷியின் சாபத்தால் குரங்குவடி வம் பெற்று, அச்சாபம் இத்தலத்திலுள்ள குமாரதீர்த்தத்

தில் மூழ்கின வுடனே தேவரீர் திருவருளால் நீங்கிவிட்டது. ஆகையால் இனியெனக்கு அரசு முதலிய செல்வங்களின்மீது விருப்பமில்லை. தேவரீர் இச்சிறியேன்மீது கருணைகூர்ந்து சாக்ஷியளித்து மோக்ஷவீட்டை யருளிச்செய்யவேண்டு மென்று துதித்து நிற்க, உடனே சிவபெருமான் அன்பனே இன்னும் சிறிது காலம் நீ உன்னாட்டிற்குச்சென்று செங்கோல் செலுத்திவிட்டு உனக்கு மரணாந்தகாலம் வருங்காலத்தில் இத்தலத்திற்கு வந்தால்நீ கோரியபடியே சாக்ஷியளித்து மோக்ஷமளிப்போம் என்று அந்தரத்தில் சொல்ல அதைக் கேட்ட அமணன் அதிக மகிழ்ச்சிகொண்டு மறுபடியும் ஆலயத்தை வலம் வந்து இளம்பிறையீசனையும் அப்பநாயகியையுந் தொழுதுகொண்டு தன் பட்டினம் போய்ச்சேர்ந்தான். கேளுங்கள் சௌனகாதிமுனிவர்களே இன்னும் இத்தலத்தின் மகிமை அநேகமிருக்கின்றன. நான் கேட்ட வரையில் உங்களுக்குச் சொன்னேன் இனிமேலும் இப்புராணத்தைப் படித்தவர்களுங் கேட்டவர்களும் இவ்வுலகத்தில் இம்மையில் சகல செல்வங்களையுமனுபவித்து மறுமையில் தேவர்களாகி அங்குள்ள போகங்களையும் அனுபவித்துச் சிவபதமடைவார்கள் என்பது சத்தியம் சத்தியம். ஆகையால் நீங்களும் அக்காம்புரியென்னும் திவ்ய க்ஷேத்திரத்திற்குப் போய் இளம்பிறையீசனையும் அப்பீநாயகியையுந் தரிசித்து உய்யக்கடவீரென்று சொல்லிச் சூதபுராணிகர் தன்னிருப்பி

டம் போய்ச்சேர்ந்தார். பின்பு நைமிசாரண்யவாசிகளெல்லாம் ஒன்றுசேர்ந்து காமக்கோட்டிபுரமென்னுங் காமநகர் வந்து அங்குள்ள கமண்டலநதி முதலிய புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கிச் சிவபிரானையும் உமாதேவியையும் பயபக்தியோடு சிரசின்மீது கைகூப்பி வணங்கி ஆலயத்தைப் பலமுறை வலம்புரிந்து தங்களிருப்பிடம் போய் மங்களகரமாய் வாழ்ந்திருந்தார்கள்.

வேதம் வாழ்க, ஆகமம் வாழ்க, விபூதிருத்திராக்ஷம் வாழ்க, சைவ சமயம் வாழ்க, யாகாதிகள் வாழ்க, மேகம் வாழ்க, பசுக்களெல்லாம் வாழ்க, வேதியர் வாழ்க, அரசன் செங்கோல் வாழ்க, இக்கதையைப் படித்தவர்களும் கேட்டவர்களும் எழுதிவைத்தவர்களும் வாழ்க. காமபுரிக்ஷேத்திரமும், அதில் வசிப்பவர்களும் என்றும் செழித்தோங்கி வாழ்க.

மங்களம், மங்களம்.

காமநகர்ப்புராணம், முற்றிற்று.

உ

கணபதி துணை.

# பொதுத்திருத்தாண்டகங்கள்.

திருச்சிற்றம்பலம்.

பொருப்பள்ளி வரைவில்லாப் புரமூன்றெய்து
புலந்தழியச சலந்தரனைப் பிளந்தான்பொற்சக்
கரப்பள்ளி திருக்காட்டுப் பள்ளிகள்ளார்
கமழ்கொல்லி யறைப்பள்ளி கலவஞ்சாரல்
சிரப்பள்ளி சிவப்பள்ளி செம்பொன்பள்ளி
செழுநனிப்பள்ளி தவப்பள்ளிசீரார்
பரப்பள்ளி யென்றென்று பகர்வோரெல்லாம்
பரலோகத் தினிதாகப் பாலிப்பாரே. (க)

திருக்கோயி லில்லாத திருவிலூருந்
திருவெண்ணீ றணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லாவூரும்
விருப்போடு வெண்சங்க மூதாவூரும்
விதானமும் வெண்கொடியு மில்லாவூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணாவூரும்
அவையெல்லா மூரல்ல அடவிகாடே. (உ)

குலம்பொல்லேன் குணம்பொல்லேன்குறியும்பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோலமாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவேநின்ற
விலங்கலேன் விலங்கலா தொழிந்தேனல்லேன்
வெறுப்பனவு மிகப்பெரிதும் பேசவல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே யீயமாட்டேன்
என்செய்வான் தோன்றினே னேழையேனே. (௩)

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவா ரவர்செல்வ மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே. (௪)

குராமலரோ டராமதியஞ் சடைமேற்கொண்டார்
குடமுழநந் தீசனைவா சகனாக்கொண்டார்
சிராமலைதஞ் சேர்விடமாத் திருந்தக்கொண்டார்
தென்றனெடுந் தேரோனைப் பொன்றக்கொண்டார்
பராபரனென் பதுதமது பேராக்கொண்டார்
பருப்பதங்கைக் கொண்டார்ப யங்கள்பண்ணி
இராவணனென் றவனைப்பே ரியம்பக்கொண்டா
இடருறுநோய்தீர்த்தென்னையாட்கொண்டாரே (௫)

மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னினல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன்
ஓரூர னல்லனோ ருவமையில்லி
அப்படியு மந்நிறமு மவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்தன்
இவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே. (௬)

நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்

ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்கவெண் குழையோன்காதில்
கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே. (எ)

வாராண்ட கொங்கையர்சேர் மனையிற்சேரோம்
மாதேவா மாதேவா வென்றுவாழ்த்தி
நீராண்ட புரோதாய மாடப்பெற்றோம்
நீறணியுங் கோலமே நிகழ்ப்பெற்றோங்
காராண்ட மழைபோலக் கண்ணீர்சோரக்
கன்மனமே நன்மனமாக் கரையப்பெற்றோம்
பாராண்டு பகடேறித் திருவார்சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ பற்றற்றோமே. (அ)

என்றுநா மியாவர்க்கு மிடைவோமல்லோம்
இருநிலத்தி லெமக்கெதிரா வாருமில்லைச்
சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோமல்லோஞ்
சிவபெருமான் றிருவடியே சேரப்பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோமன்றே
யுறுபிணியார் செறலொழிந்திட் டோடிப்போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்தசென்னிப்
புண்ணியனை நண்ணிய புண்ணியத்துளோமே. (க)

திருச்சிற்றம்பலம்.

---

இத்தேவாரங்களாகிய திருத்தாண்டகங்களில் சில பாடல்கள் கல்லார்க்கு விளங்கும்பொருட்டு இலக்கணவிதியை நோக்காமல் எழுதப்பட்டிருக்கின்றன.